# நம்வழி வேளாண்மை

பருவம் 32 ஏப்ரல் – ஜுன் 2022 இதழ் 1



ஒடைப்பட்டி பொன்னுச்சாமி சிருஷ்டி சம்மான் விருது பெறும் படம்

*இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள்*
*மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம் வழி வேளாண்மை

பருவம் 32 ஏப்ரல் – ஜுன் 2022 இதழ் 1



ஆசிரியர்

**பெ. விவேகானந்தன்**


### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

### நம்வழி வேளாண்மை குழுமம் பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பள்ளி ஸ்ருஜனா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே


**நம் வழி வேளாண்மை**

45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலைபேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com



**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,
**Honey Bee,**
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org


## பல்லுயிர் ஓம்புதல், புரிதல்

பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும். எல்லா ஜீவன்களும் பரம்பொருளின் அல்லது இயற்கை அன்னையின் பிள்ளைகளே. இதனால் ஜீவகாருண்யம் கடைபிடிப்பதன் அவசியம் கூறப்படுகிறது. தாவரங்கள், விலங்குகள் நமக்கு நல்ல அறிகுறிகளை நமக்கு உணர்த்தி முடிவில் நம்மை மேன்மைப்படுத்த உதவும். இதன் மொழி, உணர்வுகளை தெரிந்து கொள்ளும் பாங்கை உள்ளூர கவனித்தால் அதாவது அகம், புறம், சுத்தமாக இருந்து அறிய முற்பட்டால் பல புதிர்கள் தெரியவரும். முடிவில் அன்பே வெல்லும்.

ஒரு மனிதன் சினம் கொண்ட உணர்வுடன் வாழும் நாட்களில் அவன் வாழுமிடத்தில் பாம்புகள் தென்படும். பல முறை எங்கள் வீட்டில் கோபம் கொண்ட நாட்களில் பாம்பு நுழைவதைக் கண்டிருக்கின்றோம். (இதற்காக பாம்பை கொல்லும் மனப்பான்பு சிலருக்கு உண்டு. பாம்பை கொல்லுவதைவிட சினத்தை தவிர்க்க வேண்டும்). இதே அனுபவம் சிலருக்கும் நேர்ந்ததை அறிந்துள்ளேன. எங்கள் வீட்டில் முன்புறமுள்ள சுமார் 25 வருட வேப்ப மரத்தில் பால் வருவதற்கு காரணம் தெய்வாம்சம் நிறைந்ததை பிறர் கூறினர். இந்த மரத்திற்கு ஒரு முறை கழிவு நீர் கொண்டு உரம் தரலாம் என ஊற்ற மரம் பட்டு விட்டது. தெய்வாம்சம் நிறைந்த மரத்திற்கு சுத்தமான நீரையே கொடுக்க வேண்டும் என தெரிந்து கொண்டோம். எங்கள் அலுவலகத்திற்கு ஒரு வெளிநாட்டு வீட்டு பிராணி வைத்யர் (veterinarian for pet animals) அமெரிக்காவிலிருந்து வந்தார். அவர் மதுரையில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்து வந்தார். அவர் எங்கள் அலுவலகம் வர 2 நாட்கள் முன்னரே விதவிதமான பூனைகள் எங்கள் அலுவலகத்திற்கு வந்த வண்ணம் இருந்தது வியப்பை ஏற்படுத்தியது. ஒருவர் தனது சகோதரி வீட்டில் தென்னை மரம் நட தென்னங்கன்று கொடுத்தார். தென்னை மரம் வீட்டில் நட்டது சகோதரியின் கணவருக்கு ஒவ்வாமல் இருந்தது. சில வருடங்களில் மரம் காய்க்க ஆரம்பித்தது. காய்த்த மரத்தை இருவரும் பார்க்க சென்ற போது மரத்திலிருந்து உருண்டு வந்த குறும்பை சகோதரியின் கணவருக்கு கண்ணில் விழ அவர் ஒரு வாரம் அவதியுற்றார். பல்லுயிர் ஓம்புதல், புரிதல் பழகி ஆராய வேண்டும். – ஆசிரியர்

## தண்ணீர்குளம் ஸ்ரீனிவாசனின் இயற்கை வேளாண்மை



திருவள்ளூவர் மாவட்டம் காக்கலூர் பகுதி தண்ணீர்குளம் கிராமத்தில் ஸ்ரீனிவாசன் வசித்து வருகிறார். இவர் 9 வது வரை படித்து விட்டு சொந்த பூமியில் 5 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார். கடந்த 6 ஆண்டுகளாக இரசாயன உரத்தைக் குறைத்து தற்சமயம் முற்றிலும் இயற்கை வேளாண்மைக்கு மாறிவிட்டார். ஆரம்பத்தில் இயற்கை வேளாண்மையில் நெல்லில் ஏக்கருக்கு 20 மூட்டை கூட கிடைக்கவில்லை. தற்சமயம் “டீ கம்போசர்” என்ற மக்கவைக்கும் நுண்ணுயிர் கலவையை பயன்படுத்தி ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்து நல்ல நெல் மகசூல் 30 மூட்டைகளுக்கு குறைவில்லாமல் எடுத்து வருகிறார். இந்த மக்கவைக்கும் உரக்கரைசல் தொழில் நுட்பத்தால் இயற்கை வேளாண்மையில் விளைச்சலைக் கூட்டலாம் எனக் கூறுகிறார். இவர் தயார் செய்யும் இயற்கைத் தயாரிப்புகள் மற்றும் கடைபிடிக்கும் உத்திகள் பின்வருமாறு.

**மாட்டுக்கோமியம் சேகரிக்கும் தொட்டி**

இவரிடம் 5 கலப்பினபசுக்கள் உள்ளன. மாட்டு தொழுவத்தில் கட்டாந்தரையில் சரிவு தரப்பட்டு சாணக்கழிவு கோமியம் ஒரு தொட்டியில் சேகரிக்கப்பட்டு பின் நீர்பாசன வாய்க்காலுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

இவர் தன் தோட்டத்தில் வெண்டை , கத்தரிக்காய் , சுண்டக்காய், போன்ற காய்கறிச் செடிகளை சொட்டு நீர்பாசன முறையில் இயற்கை வழியில் பயிர் செய்கிறார். நெற்பயிரை நேரிடையாக விதைத்து பயிர் செய்கிறார். நெல் நட்ட 20 நாட்களில் வாத்துக்கள் மேய அனுமதிக்கிறார். இவர் 100 வாத்து குஞ்சுகள் வாங்கி 2 1/2 மாதம் வரை வளர்த்து நெற்கதிர் பிடிக்கும் முன்னர் விற்றுவிடுகிறார். வாத்துக்கள் பண்ணை குட்டையில் நீந்தி மாலையில் கூண்டுக்குள் வந்து சேர்ந்து விடும்.

**பண்ணைக்குட்டையில் மீன் வளர்ப்பு**



இவர் 120/120 அடி அளவில் சமார் 6 அடி ஆழத்தில் பண்ணை குட்டை அமைத்துள்ளார். இதில் கிணற்று நீரும் மழை நீரும் சேர்ந்து நிரம்பியிருக்கும். இதில் கட்லா, ஏரிவாலா என்ற ஏரி வவ்வால் போன்ற மீன் ரகங்களை வளர்த்து விற்பனை செய்கிறார். மீன் அறுவடை சமயம் பண்ணை குட்டை நீரை தானே வயலுக்கு செல்லுமாறு பைப் இணைத்துள்ளார். இதனால் நீரை இறைக்கும் வேலை இல்லை. இதற்கு தவிடு, கடலைபிண்ணாக்கு இறந்த பறவைகளைத் தருகிறார்.

**எள்ளில் வருமானம்**

கடந்த வருடம் (2021) எள் சாகுபடியில் 2 ஏக்கர் விதைத்து இயற்கை முறையில் பயிர் செய்து ரூ. 35,000 நிகர லாபம் பெற்றார். எள் விதைக்க உழவிற்கு ரூ. 5,000 செலவழித்தார். இரு முறை மட்டும் தெளிப்பு பாசனம் செய்தார். இதற்கு ரூ. 5,000 செலவானது. ஒரே தடவை மீன் அமினோ கரைசல் தயார் செய்து தெளித்தார். அறுவடைக்கு 35 ஆட்களுக்கு செலவு ரூ. 5,000 ஆனது. மகசூல் 550 கிலோ எடுத்தார். ரூ. 55,000 வருமானம் கிடைத்தது. செலவு போக ரூ. 35,000 நிகர லாபம் கிட்டியது என கூறுகிறார்.

**நெல் மகசூல் கூடுதல்**

இவர் தூய மல்லி என்ற ரகத்தை இயற்கை முறையில் சாகுபடி செய்து 20 மூட்டைகளுக்கு மேல் மகசூல் எடுக்க முடியவில்லை. ஒரு முறை ஆந்திரா சென்ற சமயம் அங்குள்ள விவசாயிகளின் அனுபவப்படி வேஸ்ட் "டீ கம்போசர்" அதாவது கழிவை மட்கவைக்கும் கரைசலின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார்கள். இவரும் இந்த கரைசலை விலைக்கு வாங்கி 100 லிட்டர் நீரில் 200 மி.லி கரைசல் விட்டு 2 கிலோ நாட்டு சர்க்கரை கலந்து 4 நாட்கள் புளிக்க விட்டார். நீரில் ஏடு போன்ற ஆடை படியும். பின்னர் இதனை மக்கிய குப்பையில் கலந்து 20 நாட்கள் வைத்திருந்து நிலத்திற்கு உரமிட்டு நெல் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 25–30 மூட்டை நெல் விளைச்சல் கிடைத்ததைக் கூறுகிறார். இதனை 6 மாதம் கழித்து நெல்லை அரைத்து அரிசியை சிப்பம் ரூ. 1000க்கு குறையாமல் கொடுக்கிறார். இந்த இயற்கை அரிசியை வாங்க பல வாடிக்கையாளர்கள் தேடி வருவதாகக் கூறுகிறார்.

**அசோலா வளர்ப்பு**



இவர் அசோலா என்ற பாசியை குட்டைகளில் வளர்த்து வருகிறார். கோடை காலத்தில் இதன் வளர்ச்சி குறைந்துவிடும். அதே சமயம் மரம் மூலம் நிழல் கிடைக்கும் பகுதியில் வளர்ச்சி உள்ளது. கோழிகள், மீன்கள் பாசியை பெருக்கவிடாமல் தின்றுவிடும். இதனை நெல்லுக்கு உரமாகவும், மாட்டிற்கு தீவனத்திலும் நித்தம் 3 கிலோ கொடுக்கலாம். இவரிடம் 5 பால்மாடுகள், 50–100 வான் கோழிகள், நாட்டு கோழிகள் உள்ளன. கோழிக் கூண்டிற்கு அருகில் உள்ள குட்டையில் தானாக வளர்ந்த பொன்னாங்கன்னி கீரையை கோழிகள் உணவாக எடுத்துக் கொள்கின்றன. இது தவிர புல், களைச் செடிகளை அறுத்து வந்த தீவனம் தரப்படுகிறது.

**செங்கல் சூலை வருமானம்**



நெல் அறுவடை முடிந்தபின் மாசி மாதம் துவங்கி சித்திரை வரை நிலத்து மண், கிரேஸ்ஸர் மண் 3:1 விகிதத்தில் கலந்து ஆட்கள் மூலம் செங்கல் அறுத்து சூலையில் ஏற்றி விற்பனை செய்கிறார். ஒவ்வொரு முறையும் 50,000 செங்கற்கள் தயார் செய்து கல் ஒன்றுக்கு ரூ. 8க்கு கொடுக்கிறார். தயாரிப்பு செலவு ரூ. 6 ஆகிறது. இலாபம் ரூ. 2. ஒரு கல்லுக்கு.

**தெழு உரம் இட்ட பின் நிலத்திற்கு நீர் பாய்ச்சுதல்**

மக்கும் திரவ உரம் கொண்டு ஊட்ட மேற்றிய தொழு உரம் தயாரித்து நிலத்திற்கு இட்ட பின் உடனே நீர் பாய்ச்ச வேண்டும். இல்லையெனில் அதாவது தாமதமாக சில நாட்கள் கழித்து நீர் பாய்ச்சினால் முழு பலன் கிட்டாது.

**வெல்லத்திற்கு பதில் கரும்புசாறு**

இயற்கை தயாரிப்புகள் தயாரிக்க வருடத்திற்கு நாட்டு சர்க்கரை வாங்க ரூ. 2000 வரை செலவாகிறது. இதைத் தவிர்க்க 10–12 கரும்பு கரணைகளை நடவு செய்து நடவு செய்து விட்டால் நல்ல தூறுபிடித்து முற்றவும் கரும்புகள் அறுவடை செய்து கரும்புச்சாறு

எடுக்கலாம். இதை அமிர்தக்கரைசல், மீன் அமினோ அமிலம், பஞ்சகாவ்யா தயாரிப்பில் வெல்லத்திற்கு பதில் பயன்படுத்தலாம். இதனால் வெல்லம் வாங்கும் செலவு இல்லை. கரும்புச் சாறு பிழிய மிஷனும் இருந்தால் கரும்பு ஜீஸ் எடுத்து குடும்பத்தாரும் அருந்தலாம்.

**நெல்லுக்கு கதிர் வைக்கும் சமயம் தேமோர் கரைசல்**

தேங்காய் பால் 2 லிட்டர், புளித்த மோர் 2 லிட்டர் இரண்டையும் சேர்த்து 7 நாட்கள் புளிக்க வைக்க வேண்டும். பின்னர் 10 லிட்டர் நீரில் 100 மி.லி. கரைசலை சேர்த்து தெளிக்க வேண்டும். நெல் கதிர் வைக்கும் முன்பும், பின்பும் 2 முறை இக்கரைவலை 2 லிட்டர் தெளித்தால் கதிர் மணிகள் திருப்திகரமாக இருக்கும்.

**நெல் பயிருக்கு ஏற்ற இடைவெளி**

இவர் ஏக்கருக்கு 2 கிலோ விதை பயன்படுத்தி நாற்றுகளை 1X1 அடி இடைவெளியில் குறுகிய காலப் பயிரென்றால் 3/4X3/4 இடைவெளியில் நடவு செய்தால் கேனோ விடர் மூலம் முன்னும் பின்னும் எல்லா பக்கமும் தள்ளி களையெடுக்கலாம். இதற்கு இவர் மார்க்கர் முறையில் இடைவெளி தருகிறார்.

**மண்புழு உரத் தயாரிப்பிற்கு மாற்று முறை**

மண்புழு உரம் தயாரிக்க தொட்டி கட்டி குப்பையிட்டு வளர்க்கும் முறையில் சிரமும் வேலைப்பாடும் அதிகம். மாற்றாக மக்கும் திரவ உரக்கரைசல் (“டீ கம்போசர்”) மூலம் குப்பையில் தெளித்து சுமார் 20 நாட்கள் வைத்திருந்து நிலத்திற்கு இடுவது சிறந்த முறை எனக் கூறுகிறார். இதற்கு செலவும் வேலைபாடும் குறைவு. பலன் அதிகம்.

**மீன் அமிலோ அமிலம்**

கழிவு மீன் 1 கிலோ, கழிவு வெல்லம் 1 கிலோ சேர்த்து 1 மாதம் ஒரு பாத்திரத்தில் வைத்து கிடைக்கும் கரைசலாகும். இதனை 100 மி.லி. எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்க யூரியா போடுவதை முற்றிலும் தவிர்க்கலாம். அதாவது நல்ல தழை சத்து உரம் கிடைக்கும். இதனை ஒரு லிட்டர் கரைசலை ரூ. 70 க்கு தருகிறார்.

ஸ்ரீனிவாசன்
த/பெ. கோவிந்தன்,
தண்ணீர்க்குளம், மேட்டுத் தெரு, காக்கலூர் அஞ்சல்
திருவள்ளூர் மாவட்டம், செல் : 9444892447

## விவசாயமும் பெட்ரோல் கிணறும்

டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாகை, மயிலாடுதுறை மற்றும் கடலூர் போன்ற மாவட்டங்கள் அனைத்தும் பெட்ரோல் மண்டல மாவட்டங்களாக உள்ளன. ஏன் என்றால் பூமியில் குறிப்பிட்ட சில அடிகளுக்கு கீழ் பகுதியில் பெட்ரோல் எண்ணெய் கிணறுகள் உள்ளன என கூறப்படுகிறது. நாம் விவசாயம் குறிப்பிட்ட அடிகளுக்கு மேல் பயிர் செய்ய இயலாது. பெட்ரோல் மண்டலம் அரியலூர் பெரம்பலூர் வரை தொடர்வதாக ஆய்வு அறிக்கைகள் உள்ளன ஏன் என்றால் இதனை நாம் எடுக்கவில்லை எனில் பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா, இலங்கை போன்ற நாடுகள் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் உறிஞ்சி எடுக்க தயாராக உள்ளன. தற்சமயம் சீனா அதற்கு ஆயுத்தமாக இலங்கை கடற்பகுதியில் டேரா போட ஆரம்பித்து விட்டார்கள். நாம் விட்டால் டெல்டா பூமியில் இருந்து பெட்ரோல் போன்றவைகளை அண்டை நாடுகள் உறிஞ்சி விடத் துடிக்கின்றன. நாம் தான் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க வேண்டும். இயற்கை வேளாண்மை மற்றும், பெட்ரோல் இதனை நாம் விட்டுத் தரக் கூடாது. அப்படி தரும் பட்சத்தில் இந்திய மிகவும் வளர்ந்த நாடுகளிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்படும். இதனை அரசியல் ஆக்கவும் நம் நாடு வளர்ச்சி அடைய அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து ஒரே பந்தில் சிக்சர் அடிக்க வேண்டும் என்பது என் எண்ணம். டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாகை, மயிலாடுதுறை மற்றும் கடலூர் போன்ற மாவட்டங்கள் அனைத்து பெட்ரோல் மண்டல மாவட்டங்களாக உள்ளன. ஏன் என்றால் பூமியில் குறிப்பிட்ட சில அடிகளுக்கு கீழ் பகுதியில் பெட்ரோல் எண்ணெய் கிணறுகள் உள்ளன. அப்படி தரும்பட்சத்தில் இந்திய மிகவும் வளர்ந்த நாடுகளிடம் கையேந்து நிலைக்குத் தள்ளப்பட்டு. இதனை அரசியல் ஆக்கவும் நாடு வளர்ச்சி அடைய அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து

தனசேகரன்,
2/41, அக்ரஹாரம், சூலமங்களம்,
பசுபதி கோவில் தெரு, தஞ்சாவூர் – 614206

## தமிழ்நாட்டின் பாரம்பரிய நெல் ரகங்கள்

பாரம்பரிய இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதிலும் பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாக்கும் பணிகளிலும் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் (CIKS) கடந்த 25 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது. பாரம்பரிய நெல் ரகங்கள் பல்வேறு பண்புகள் கொண்டவை. ஆண்டு முழுவதும் பயிர் செய்யக்கூடிய பல நெல் ரகங்கள் நம் நாட்டில் உள்ளன. வறட்சி மற்றும் வெள்ளத்திலிருந்து பாதுகாப்பு பூச்சி மற்றும் நோய்களைத் தாங்கி வளரும் தன்மை மருத்துவ குணங்கள், சிறப்பு ஊட்டச்சத்து கொண்ட ரகங்கள் குறிப்பிட்ட உணவு பொருட்கள் தயாரிக்க ஏற்ற ரகங்கள் போன்ற பல காரணங்களுக்காக பாரம்பரிய ரகங்கள் விவசாயிகளால் இன்றும் பயிரிடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆனால், முறையான சந்தை இல்லாத காரணத்தால் இவை வேகமாக அழிந்து வருகின்றன. அழிந்து வரும் இந்த ரகங்களை மீட்டெடுத்து விதை உற்பத்தி செய்து விவசாயிகளைப் பெரிய அளவில் பயிரிடச் செய்து சந்தைப்படுத்தும் பணியில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் உதவியுடன் ஈடுபட்டு வருகிறது. இந்த பாரம்பரிய நெல் ரகங்கள் பற்றிய விவரம் புத்தக வடிவில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள நெல் ரகங்களின் விவரம் பின்வருமாறு:

**அடுக்கு நெல்** (வெள்ளை நிற அரிசி)

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள் : 140 நாள் பயிர், சராசரி உயரம் 122 செ.மீ. அதிகபட்ச உயரம் 135 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 142 நெல்மணிகள்.1000 நெல்மணிகளின் எடை 37.0 கிராம், வெள்ளை நிற நடுத்தர அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1000 கிலோ நெல் மற்றும் 1800 கிலோ வைக்கோல்

ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் மற்றும் புரதச் சத்து பொட்டாசியம், இரும்பு மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் அதிகம் கொண்டது. கால்சியம் மிக அதிக அளவில் உள்ளது.

**அம்பேமொஹர்** (வெள்ளை நிற நடுத்தர அரிசி )

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம். 135 நாள் பயிர், சராசரி உயரம் 85 செ.மீ அதிகபட்ச உயரம் 97 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 60 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 170 கிராம், வெள்ளை நிற நடுத்தர அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு) : 600 கிலோ நெல் மற்றும் 1800 கிலோ வைக்கோல்

ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல், புரதச் சத்து பொட்டாசியம், மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் கால்சியம் இரும்பு பாஸ்பரஸ் மிக அதிக அளவில் உள்ளது.

இதர தகவல்கள் : அம்பேமொஹர் மஹாராஷ்டிராவிலிருந்து பெறப்பட்டது. இது மராட்டிய ஆட்சியாளர்களிடையே மிகவும் பிரபலமாக இருந்தது லேசான மாங்காய் வாசனையுடைய அரிசி.

**கருடன் சம்பா(**வெள்ளை நிற சன்ன அரிசி**)**

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள் :130 நாள் பயிர், சராசரி உயரம் 118 செ.மீ. அதிகபட்ச உயரம் 135 செ.மீ சாயும் தன்மையுடையது.

நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 89 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 26.0 கிராம். வெள்ளை நிற சன்ன அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 900 கிலோ நெல் மற்றும் 1300 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல், புரதச் சத்து, பொட்டாசியம் , துத்தநாகம், பாஸ்பரஸ் அதிக அளவில் உள்ளது. மற்றும் கால்சியம், இரும்பு, மெக்னீசியம் மிக அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள் : சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம் இது புட்டு தயாரிக்க ஏற்றது.

**இலுப்பைப் பூ சம்பா** (வெள்ளை நிற சன்ன அரிசி)

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள் : 120 நாள் பயிர், சராசரி உயரம் 110 செ.மீ. அதிகபட்ச உயரம் 118 செ.மீ சாயும் தன்மையுடையது.

நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 135 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 19.0 கிராம் வெள்ளை நிற சன்ன அரிசி.

மகசூல் (ஒரு ஏக்கருக்கு) : 700 கிலோ நெல் மற்றும் 1200 கிலோ வைக்கோல்.

பெயர் காரணம் :நெல்மணி மற்றும் அரிசிக்கு இலுப்பைப் பூ போன்ற வாசனை இருப்பதால் இந்தப் பெயர் பெற்றது.

ஊட்டச்சத்து பண்புகள் : புரதச் சத்து கொண்டது. இரும்பு கால்சியம் மற்றும் துத்தநாகம் அதிகம் உள்ளது.

சமையல் / உணவுகள் : பாயசம் தயாரிப்பதற்கு ஏற்றது.

இதர தகல்கள்: பூச்சித் தாக்குதலை எதிர்க்கும் தன்மை உடையது. நீரிழிவு நோய் மற்றும் முழங்கால் வலி உள்ளவர்களுக்கு ஏற்ற ரகம். இதன் கஞ்சி பக்கவாதத்திற்கு (ஒரு வகையான பக்கவாதம் ஒரு புறம் கை, கால்களை பாதிக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

**இறவைபாண்டி** (சிவப்பு நிற அரிசி)

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள் : 120 நாள் பயிர். சராசரி உயரம் 145 செ.மீ. அதிகபட்ச உயரம் 167 செ.மீ சாயும் தன்மையுடையது.

நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 148 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 22.0 கிராம், நெல்மணிகள் வெளிர் மஞ்சள் நிறமுடையவை வெள்ளை நிற நடுத்தர அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1350 கிலோ நெல் மற்றும் 1800 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள்: சாம்பல் மற்றும் புரதச் சத்து அதிக அளவில் உள்ளது. பொட்டாசியம் இரும்பு மெக்னீசியம், துத்தநாகம் அதிக அளவிலும் கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் மிக அதிக அளவிலும் உள்ளது.

சமையல் / உணவுகள்: சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம்.

**ஜீரகசாலே**

சாகுபடிக்கேற்ற பட்டம்: சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள்: 150 நாள் பயிர். சராசரி உயரம் 98 செ.மீ. அதிகபட்ச உயரம் 110 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 127 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 23.0 கிராம். வெள்ளை நிற சன்ன அரிசி.

மகசூல் : ஒரு ஏக்கருக்கு 650 கிலோ நெல் மற்றும் 980 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : புரதச்சத்து அதிக அளவில் உள்ளது. இரும்பு மெக்னீசியம், துத்தநாகம் அதிக அளவில் உள்ளது.

**காடைக்கழுத்தான்** (வெள்ளை நிற சன்ன அரிசி)

சாகுபடிக்கேற்ற பட்டம்: சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள் : 170 நாள் பயிர், சராசரி உயரம் 135 செ.மீ. அதிகபட்ச உயரம் 150 செ.மீ. சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 160 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 270 கிராம். நெல்மணி சிவப்பு நிறமுடையது. வெள்ளை நிற சன்ன அரிசி.

மகசூல் (ஒரு ஏக்கருக்கு) : 1350 கிலோ நெல் மற்றும் 1200 கிலோ வைக்கோல்.

பெயர் காரணம் : இந்த ரகத்திற்கு கருடன் சம்பா என்ற பெயரும் உண்டு. கருடனுடைய கழுத்துப்பகுதி போன்ற தோற்றத்தை இந்த ரகத்தின் நெல்மணிகள் பெற்றிருப்பதால் காடைக்கழுத்தான் என்ற பெயர் பெற்றது.

ஊட்டச்சத்து பண்புகள்: சாம்பல், புரதச் சத்து அதிக அளவில் உள்ளது பொட்டாசியம், இரும்பு, மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் அதிகம் கொண்டது. கால்சியம் மிக அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள் : சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம். இது புட்டு தயாரிக்க ஏற்றது.

இதர தகவல்கள் : நல்ல வடிகால் வசதி உள்ள நிலங்களில் நன்றாக வளரும்.

**கைவரி சம்பா** (சிவப்பு நிற மோட்டார் அரிசி)

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள் : 30 நாள் பயிர், சராசரி உயரம் 145 செ.மீ. அதிகபட்ச உயரம் 158 செ.மீ. சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை : 147 நெல்மணிகள் 1000 நெல்மணிகளின் எடை 280 கிராம். சிவப்பு நிற மோட்டார் அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 650 கிலோ நெல் மற்றும் 1300 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள்: சாம்பல், புரதச் சத்து அதிக அளவில் உள்ளது. மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் அதிகம் உடையது. பொட்டாசியம், இரும்பு மற்றும் கால்சியம் மிக அதிக அளவில் உள்ளது.

கருவின் வளர்ச்சிக்குத் தேவையான ஃபோலிக் அமிலம் அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள்: சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம். இட்லி, தோசை, இடியாப்பம் மற்றும் அவல் / போஹா ஆகியவற்றுக்கு ஏற்றது.

இதர தகவல்கள்: பூச்சி மற்றும் நோய்களுக்கான எதிர்ப்பு சக்தி உடையது. வறட்சி மற்றும் நீர்பிடிப்பு ஆகிய இரண்டையும் தாங்கக்கூடியது.

**காலாநமக்** (சிவப்பு நிற சன்ன அரிசி )

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள்: 120 நாள் பயிர் சராசரி உயரம் 107 செ.மீ அதிகபட்ச உயரம் 125 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 78 நெல்மணிகள்.1000 நெல்மணிகளின் எடை 2.3.0 கிராம். சிவப்பு நிற சன்ன அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 640 கிலோ நெல் மற்றும் 1960 கிலோ வைக்கோல்.

பெயர் காரணம் : கருப்பு (காலா) உமி மற்றும் லேசான உப்பு (நமக்) சுவை உடையதால் இந்த பெயர் பெற்றது. நமக் என்ற சொல் எந்த விதமான உப்பு மண்ணிலும் இது வளரும் என்பதையும் குறிப்பிடுகிறது.

ஊட்டச்சத்து பண்புகள்: இதில் புரதச் சத்து மிக அதிக அளவு இருக்கிறது. இரும்பு கால்சியம் மற்றும் துத்தநாகம் அதிகம் உள்ளது.

சமையல் / உணவுகள்: ஒரு நறுமண அரிசி புலாவ் மற்றும் பல்வேறு உணவு வகைகளுக்கு தேங்காய் சாதம். எலுமிச்சை சாதம். இன்னும் பல பயன்படுத்தலாம். கீர்(பாயசம்) தயாரிப்பதற்கும் ஏற்றது. பாஸ்மதிக்கு ஒரு நல்ல மாற்று அரிசி ஆகும்.

இதர தகவல்கள்: இந்த அரிசியின் பிறப்பிடம் உத்திரப்பிரதேசம் இதற்கு புவிசார் குறியீடு (Geographical Indicator) தகுதி அளிக்கப்பட்டுள்ளது.

டேரிடர் நிர்வாகத்தில் பங்கு : இது உப்பு மண்ணில் வளரும் தன்மையுடையது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நிலங்களை மீட்டெடுக்கப் பயன்படுத்தப்பட்டது.

**களர்பாளை**

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள்: 130 நாள் பயிர், சராசரி உயரம் 105 செ.மீ அதிகபட்ச உயரம் 120 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 120 நெல்மணிகள்.1000 நெல்மணிகளின் எடை 32.0 கிராம். மங்கலான வெள்ளை நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 550 கிலோ நெல் மற்றும் 1110 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : இதில் புரதச் சத்து அதிக அளவில் இருக்கிறது. இரும்பு கால்சியம் மற்றும் துத்தநாகம் அதிகம் இருக்கிறது.

இதர தகவல்கள்: பூச்சிகள் மற்றும் நோய்களுக்கான எதிர்ப்புச் சக்தி அதிகம் உடையது. வைக்கோல் மற்றும் தானியங்களின் மகசூல் குறைவாக இருக்கும்.

சாகுபடி பரப்பு தமிழ்நாட்டின் உவர் மண்ணில் களர்பாளையை மட்டுமே பயிரிட முடியும்.

டேரிடர் நிர்வாகத்தில் பங்கு : களர்பாளை களர் மண்ணில் நன்றாக வளரும் 20 முதல் 120 நிமிடங்கள் வரையிலான கடல் நீரில் மூழ்கியிருந்த நாகப்பட்டிணம் மாவட்டத்தின் சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களில் பயிரிட உகந்த ரகமாக இருந்தது.

**கம்பன் சம்பா** (டல் வெள்ளை அரிசி)

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள்: 140 நாள் பயிர், சராசரி உயரம் 110 செ.மீ அதிகபட்ச உயரம் 118 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை : 171 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 200 கிராம். மங்கலான வெள்ளை நிற நடுத்தர அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1300 கிலோ நெல் மற்றும் 1950 கிலோ வைக்கோல்

ஊட்டச்சத்து பண்புகள் : இதில் புரதச் சத்து அதிக அளவில் இருக்கிறது. இரும்பு, கால்சியம் மற்றும் துத்தநாகம் அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள் : பொங்கல் செய்ய ஏற்றது.

**கப்பக்கார்**

சாகுபடிக்கேற்ற பட்டம்: சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள் : 50 நாள் பயிர், சராசரி உயரம் 123 செ.மீ அதிகபட்ச உயரம் 130 செ.மீ மிதமாகச் செய்யக் கூடியது. நெற்கதிரில் உள்ள மணிகளின்

எண்ணிக்கை : 180 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 28.0 கிராம். நெல்மணி அடல் பழுப்பு நிறமுடையது. பழுப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு) : 1350 கிலோ நெல் மற்றும் 1800 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : இதில் சாம்பல் மற்றும் புரதச் சத்து அதிக அளவில் இருக்கிறது. பொட்டாசியம் மற்றும் துத்தநாகம் அதிக அளவில் உள்ளது. மிக அதிக அளவில் இரும்பு கால்சியம், மெக்னீசியம் மற்றும் பாஸ்பரஸ் உள்ளது.

சமையல் / உணவுகள் : இட்லி, தோசை மற்றும் அவல் (தட்டையான அரிசி) செய்ய இந்த ரகம் மிகவும் ஏற்றது.

இதர தகவல்கள்: கப்பக்கார் வறட்சி வெள்ளம், பூச்சி மற்றும் நோய்களை தாங்கும் திறன் கொண்டது. இந்த வகை நெல் வறண்ட நிலப்பகுதிகளில் பயிரிடப்படுகிறது. தீவிர வறண்ட நிலப்பகுதிகளில் விளைச்சலை உற்பத்தி செய்ய முடியும்.

சாகுபடி பரப்பு : தமிழ்நாட்டில் மதுரையில் களிமண் நிலத்தில் கப்பக்காரை பயிரிட விரும்புகின்றனர்.

கலாச்சார நடைமுறைகள் : சீமந்தம் (கர்ப்ப காலத்தில் நடத்தப்படும் ஒரு சடங்கு) போன்ற விசேஷங்களில் விருந்திற்குப் பயன்படுத்துகின்றனர்.

**கருங்குறுவை**

சாகுபடிக்கேற்ற பட்டம்: நவரை மற்றும் குறுவை பட்டம்

உழவியல் தன்மைகள்: 125 நாள் பயிர் சராசரி உயரம் 95 செ.மீ அதிகபட்ச உயரம் 101 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 85 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 25.48 கிராம் நெல்மணி கருப்பு நிறமுடையது அடர் பழுப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 825 கிலோ நெல் மற்றும் 1200 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : இதில் சாம்பல் சத்து புரதச்சத்து அதிக அளவில் இருக்கிறது. பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம். அதிக அளவில் உள்ளது. மிக அதிக அளவில் இரும்பு கால்சியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் உள்ளது.

சமையல் / உணவுகள் : இட்லி, தோசை செய்ய இந்த ரகம் ஏற்றது.

இதர தகவல்கள் : இது சித்த மருத்துவர்களால் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. அவர்கள் இதை யானைக்கால் நோய் சிகிச்சைக்கும் பயன்படுத்துகின்றனர்.

கருங்குறுவையின் ஜி.ஐ. : கருங்குறுவையின் கிளைசெமிக் குறியீடு (ஜி.ஐ) 50+55 வரம்பில் உள்ளது. சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற ரகம்.

**கருப்புகௌனி** (கருப்பு அரிசி)

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள்: 130 நாள் பயிர், சராசரி உயரம் 120 செ.மீ அதிகபட்ச உயரம் 144 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 170 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 420 கிராம் அடர் பழுப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 800 கிலோ நெல் மற்றும் 1200 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள்: இதில் புரதச்சத்து அதிகம். சாம்பல் சத்து மிக அதிகம். பொட்டாசியம் மெக்னீசியம் மற்றும் துத்தநாகம் அதிக அளவில் உள்ளது. மிக அதிக அளவில் இரும்பு கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் உள்ளது.

சமையல் / உணவுகள் : இட்லி தோசை மற்றும் இனிப்பு பண்டம் செய்ய ஏற்றது.

இதர தகவல்கள் : விஷம் மற்றும் விஷக்கடி சிகிச்சைக்குப் பயனுள்ளதாக சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டின் செட்டியார் சமூகத்தினரால் மிகவும் மதிக்கப்படும் இந்த அரிசி உணவுகளை விருந்தினர்களை கௌரவப்படுத்த தயார் செய்கின்றனர்.

**காட்டுயானம்** (சிவப்பு அரிசி)

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

150 நாள் பயிர், சராசரி உயரம் 160 செ.மீ அதிகபட்ச உயரம் 180 செ.மீ. சாயும் தன்மையுடையது.

நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை : 110 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 29.0 கிராம். சிவப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு) : 900 கிலோ நெல் மற்றும் 1400 கிலோ வைக்கோல். இதில் புரதச்சத்து அதிகம் உள்ளது. பொட்டாசியம், இரும்பு, கால்சியம், மெக்னிசியம்

துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் அதிக அளவில் உள்ளது.

சமையல் உணவுகள் : இட்லி, தோசை இடியாப்பம் மற்றும் கீர் (பாயசம்) செய்ய ஏற்றது. சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம்.

இதர தகவல்கள் : பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் கொண்டது. அமிர்த கரைசலுடன் கலந்த இதன் வைக்கோல் மண்ணிலுள்ள நுண்ணுயிரிகளுக்கு நல்ல உணவாகும். இது மிகவும் உயரமாக வளரும். யானையின் உயரம் வரை என்பதால் காட்டுபானம் என்ற பெயர் பெற்றது.

**கிச்சிலி சம்பா (**வெள்ளை அரிசி**)**

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள்: 140 நாள் பயிர் சராசரி உயரம் 102 செ.மீ அதிகபட்ச உயரம் 120 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 130 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 170 கிராம். வெள்ளை நிற சன்ன அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1125 கிலோ நெல் மற்றும் 1050 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : கிச்சிலி சம்பா பச்சரிசியில் புரதச் சத்து அதிகமாகவும் மற்றும் இரும்புச் சத்து மிக அதிகமாகவும் உள்ளது. கால்சியம், மெக்னீசியம் மற்றும் துத்தநாகம் அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள்: சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம் பிரியாணி செய்யவும் பயன்படுத்தப்படுகிறது.

இதர தகவல்கள்: பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புச் திறன் கொண்டது. இந்த ரகம் மானாவாரிக்கு ஏற்றது.

**கூம்வாழை** (பழுப்பு நிற மோட்டா அரிசி. )

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள்: 130 நாள் பயிர் சராசரி உயரம் 135 செ.மீ. அதிகபட்ச உயரம் 142 செ.மீ. சாயும் தன்மையுடையது.

நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 220 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 28.0 கிராம். நெல்மணியின் நிறம் மஞ்சள் பழுப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1350 கிலோ நெல் மற்றும் 1800 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள்: சாம்பல் மற்றும் புரதச் சத்து அதிகமாக உள்ளது. பொட்டாசியம் இரும்பு அதிகமாகவும் கால்சியம், மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் மிக அதிகமாகவும் உள்ளது.

சமையல் / உணவுகள்: இந்த அரிசி இட்லி மற்றும் தோசை செய்வதற்கு மிகவும் ஏற்றது.

இதர தகவல்கள்: மணற்பாங்கான நிலத்திற்கு ஏற்றது. நீர்த்தேக்கப்பகுதிகளிலும் நன்றாக வளரும். கர்ப்ப காலத்தில் இந்த அரிசியை தினந்தோறும் உட்கொண்டால் பிரசவ நேரத்தில் வலியைக் குறைக்கும்.

**கொத்தமல்லி சம்பா** (மங்கலான வெள்ளை அரிசி)

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள்: 135 நாள் பயிர், சராசரி உயரம் 108 செ.மீ. அதிகபட்ச உயரம் 117 செ.மீ. சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 132 நெல் மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 32.0 கிராம். நெல்மணி வைக்கோல் நிறம் கொண்டது. மங்கலான வெள்ளை நிற, நடுத்தர மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1000 கிலோ நெல் மற்றும் 1900 கிலோ வைக்கோல்

பெயர் காரணம் : நெல்மணிகள் கொத்தமல்லி போலிருப்பதால் இதற்கு இந்த பெயர் வந்தது.

ஊட்டச்சத்து பண்புகள் : புரதச்சத்து அதிகமாக உள்ளது. இரும்பு, கால்சியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் மிக அதிகமாக உள்ளது.

**கொட்டார சம்பா**

சாகுபடிக்கேற்ற பட்டம்: சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள்: 130 நாள் பயிர், சராசரி உயரம் 124 செ.மீ அதிகபட்ச உயரம் 140 செ.மீ சாயும் தன்மையுடையது.

நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 74 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 22.0 கிராம். நெல்மணி சிவப்பு நிறம் கொண்டது.

மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 700 கிலோ நெல் மற்றும் 1300 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் மற்றும் புரதச் சத்து அதிகமாக உள்ளது. இரும்பு மெக்னீசியம் மற்றும் பாஸ்பரஸ் அதிகமாகவும் துத்தநாகம் மிக அதிகமாகவும் உள்ளது.

**குடை வாழை**

சாகுபடிக்கேற்ற பட்டம் : பின் சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள்: 130 நாள் பயிர் சராசரி உயரம் 135 செ.மீ. அதிகபட்ச உயரம் 152 செ.மீ சாயும் தன்மையுடையது. இந்த ரகம் நீர் பிடிப்புப் பகுதிகளுக்கு மிகவும் ஏற்றது. இது ஒரு குறுகிய கால ரகம் என்பதால் ஆண்டுக்கு மூன்று முறை கூடப் பயிரிடலாம். நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை : 230 நெல்மணிகள்.

நெல்மணியின் இயல்புகள்: 1000 நெல்மணிகளின் எடை 32.0 கிராம், நெல்மணி வைக்கோல் நிறம் உடையது. சிவப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1600 கிலோ நெல் மற்றும் 1800 கிலோ வைக்கோல்

பெயர் காரணம் : இந்த ரகத்தின் நெற்கதிர்கள் குடை விரித்தது போல் காணப்படும். எனவே இந்த ரகத்தைக் குடை வாழை என்று அழைக்கிறார்கள்

ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் மற்றும் புரதச் சத்து அதிகமாக உள்ளது. பொட்டாசியம் அதிகமாகவும் இரும்பு கால்சியம் துத்தநாகம் மெக்னீஷியம் மற்றும் பாஸ்பரஸ் மிக அதிகமாகவும் உள்ளது. குறைந்த கிளைசெமிக் குறியீட்டைக் (Low Glycemic Index) கொண்டுள்ளது.

சமையல் / உணவுகள்: இந்த அரிசி இட்லி மற்றும் தோசை போன்ற உணவுகளை தயாரிக்க மிகவும் ஏற்றது.

இதர தகவல்கள்: இதன் வைக்கோல் கூரை வேய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**குழியடிச்சான்**

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள் : 120 நாள் பயிர் சராசரி உயரம் 80 செ.மீ. அதிகபட்ச உயரம் 97 செ.மீ சாயும் தன்மையுடையது.

நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 110 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 33.0 கிராம். நெல்மணிகள் மஞ்சள் நிறத்தில் கருப்பு நிறக் கோடுகளுடனும் அரிசி பழுப்பு நிறத்திலும் காணப்படும் மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 975 கிலோ நெல் மற்றும் 900 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் மற்றும் புரதச் சத்து அதிகமாக உள்ளது. பொட்டாசியம் துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் அதிகமாக உள்ளது. இரும்பு கால்சியம் மற்றும் மெக்னீஷிம் மிக அதிக அளவில் உள்ளது. பாலூட்டும் தாய்மார்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. ஏனெனில் இது பால் சுரப்பை அதிகப்படுத்தும் என்று கூறப்படுகிறது.

சமையல் / உணவுகள்: இந்த அரிசி இட்லி மற்றும் தோசை போன்ற உணவுகளை தயாரிக்க மிகவும் ஏற்றது. சர்க்கரை பொங்கலுக்கு ஏற்ற ரகம்.

இதர தகவல்கள் : களர் நிலத்திற்கும் வடிவால் வசதியுடைய நிலத்திற்கும் ஏற்றது. அதிக வறட்சி பூச்சி மற்றும் நோய்களுக்கான எதிர்ப்புத் திறன் கொண்டது.

**குள்ளக்கார்**

சாகுபடிக்கேற்ற பட்டம் : சொர்ணவாரி, நவரைப் பட்டம்

உழவியல் தன்மைகள் : 120 நாள் பயிர், சராசரி உயரம் 87 செ.மீ அதிகபட்ச உயரம் 100 செ.மீ சாயும் தன்மையுடையது.

நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 100 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 30.0 கிராம் நெல்மணிகள் வைக்கோல். நிறத்திலும் அரிசி சிவப்பு நிறத்திலும் காணப்படும் மோட்டா அரிசி.

மகசூல் (ஒரு ஏக்கருக்கு) : 1500 கிலோ நெல் மற்றும் 1500 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் மற்றும் புரதச் சத்து அதிகமாக உள்ளது. பொட்டாசியம் அதிகமாக உள்ளது. இரும்பு, கால்சியம், மெக்னீஷியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் மிக அதிக அளவில் உள்ளது. குறைந்த கிளைசெமிக் குறியீட்டைக் (Low Glycemic Index) கொண்டுள்ளது.

சமையல் /உணவுகள் : இந்த அரிசி இட்லி மற்றும் தோசை செய்வதற்கு மிகவும் ஏற்றது. கஞ்சிக்கும் ஏற்ற ரகம்.

இதர தகவல்கள்: பூச்சி மற்றும் நோய்களுக்கான எதிர்ப்புத் திறன் கொண்டது. வறட்சியைத் தாங்கும் சக்தி உடையது. இது ஒரு குறுகிய கால ரகம் என்பதால் மூன்று பருவங்களிலும் பயிடலாம். இதன் வைக்கோல் கூரை வேய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**மாப்பிள்ளை சம்பா** (சிவப்பு அரிசி)
சாகுபடிக்கேற்ற பட்டம்: சம்பா பட்டம்
உழவியல் தன்மைகள்: 160 நாள் பயிர், சராசரி உயரம் 137 செ.மீ அதிகபட்ச உயரம் 147 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 135 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 31.0 கிராம் சிவப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் : ஒரு ஏக்கருக்கு 750 கிலோ நெல் மற்றும் 1600 கிலோ வைக்கோல்.
பெயர் காரணம் : மணப்பெண்ணை தேடும் இளைஞர்கள் இளவட்டக்கல் எனப்படும் கல்லைத் தூக்கி வலிமையை நிரூபிக்க வேண்டும். இந்த இளைஞர்கள் மாப்பிள்ளை சம்பா அரிசிச் சாதம் மற்றும் கஞ்சியை உணவாகக் கொண்டு வலிமை பெறுவதால் மாப்பிள்ளை சம்பா என்ற பெயர் பெற்றது.
ஊட்டச்சத்து பண்புகள் : பொட்டாசியம், இரும்பு, மெக்னீஷயம் மற்றும் பாஸ்பரஸ் மிக அதிக அளவில் உள்ளது.
சமையல் / உணவுகள் : புழுங்கல் அரிசி பிரியர்களுக்கான சாப்பாட்டு அரிசி இதை அவலுடன் கலந்து அவல் ஆப்பம் செய்யலாம். இந்த அரிசி இட்லி மற்றும் தோசை போன்ற உணவுகளை தயாரிக்க மிகவும் ஏற்றது.
இதர தகவல்கள்: இது வலிமை மற்றும் சக்திக்கு பரிந்துரைக்கப்படுகிறது. கூரை வேய்வதற்கு வைக்கோல் பயன்படுத்தப்படுகிறது.
கிளைசெமிக் அட்டவணை: வெள்ளை பொன்னி போன்ற சந்தை வகைகளோடு ஒப்பிடும் போது மாப்பிள்ளை சம்பாவின் ஜி.ஐ குறைவாக உள்ளது. இதன் ஜி.ஐ (Glycemic Index) 66–70 என்ற வரம்பில் உள்ளது.

**மொழிகருப்பு சம்பா**
சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்
உழவியல் தன்மைகள்: 120 நாள் பயிர் சராசரி உயரம் 125 செ.மீ அதிகபட்ச உயரம் 135 செ.மீ சாயும் தன்மையுடையது.
நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 220 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 36.0 கிராம். சிவப்பு நிற மோட்டா அரிசி.
மகசூல் : ஒரு ஏக்கருக்கு 600 கிலோ நெல் மற்றும் 1500 கிலோ வைக்கோல்.
ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் சத்து அதிகமாக உள்ளது. இரும்பு மற்றும் துத்தநாகம் மிக அதிக அளவில் உள்ளது.

**முல்லன்கைமா** (ஆரோமெட்ரிக் வெள்ளை)
சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்
உழவியல் தன்மைகள் : 150 நாள் பயிர். சராசரி உயரம் 82 செ.மீ அதிகபட்ச உயரம் 135 செ.மீ சாயும் தன்மையுடையது. வெள்ளை நிற நடுத்தர அரிசி.
ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் சத்து அதிகமாக உள்ளது. இரும்பு கால்சியம் மற்றும் துத்தநாகம் மிக அதிக அளவில் உள்ளது.
சமையல் / உணவுகள்: சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம் அனைத்து வகையான பிரியாணி தயாரிக்க மிகவும் ஏற்ற அருமையான அரிசி .
சாகுபடி பரப்பு : கேரளாவின் வயநாடு பகுதிகளில் பழங்குடி மக்களால் இந்த அரிசிக்கு புவிசார் குறியீடு (Geographical Indicator) தகுதி கிடைத்துள்ளது.

**நவரா** (சிவப்பு அரிசி)
சாகுபடிக்கேற்ற பட்டம் : நவரை பட்டம்
உழவியல் தன்மைகள்: 90 நாள் பயிர் சராசரி உயரம் 108 செ.மீ. அதிகபட்ச உயரம் 115 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 1110 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 39.0 கிராம் சிவப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 700 கிலோ நெல் மற்றும் 1087 கிலோ வைக்கோல்.
ஊட்டச்சத்து பண்புகள்: புரதச்சத்து அதிகமாக உள்ளது. பொட்டாசியம், மெக்னீஷியம் இரும்பு, துத்தநாகம், கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் மிக அதிக அளவில் உள்ளது.
சமையல் / உணவுகள் : சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம் கேரளா நெய் பாயசத்திற்கு ஏற்ற ரகம். சுவையான கஞ்சி செய்ய ஏற்றது.
மருத்துவ பயன்பாடு : நவரா அரிசி கேரளாவில் பஞ்சகர்மா என்ற சிறப்பு ஆயுர்வேத சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகிறது. தாய்ப்பாலுக்கு அடுத்ததாக குழந்தைகளுக்கான முதல் உணவாகக் கொடுக்கப்படுகிறது.

**நீலஞ்சம்பா** (சிவப்பு அரிசி)
சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்
உழவியல் தன்மைகள்: 180 நாள் பயிர் சராசரி உயரம் 132 செ.மீ அதிகபட்ச உயரம் 155 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 185 நெல்மனிகள் 1000 நெல்மணிகளின் எடை 29.0 கிராம். நெல்மணிகள் மஞ்சள் கலந்த கருப்பு நிறத்திலும், அரிசி சிவப்பு நிறத்திலும் இருக்கும் மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1500 கிலோ நெல் மற்றும் 1800 கிலோ வைக்கோல்.
ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் சத்து அதிகமாக உள்ளது. பொட்டாசியம் இரும்பு துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் அதிக அளவில் உள்ளது. மெக்னீஷியம் மற்றும் கால்சியம் மிக அதிக அளவில் உள்ளது. கிளைசெமிக் குறியீடு (Glycemic Index) குறைவாக உள்ளது. பாரம்பரியமாக பாலூட்டும் தாய்மார்களுக்கு இது மிகவும் நல்லது என்று கருதப்படுகிறது. ஏனெனில் இது பால் சுரப்பை அதிகப்படுத்துகிறது.
சமையல் / உணவுகள்: சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம் சுவையான இட்லி செய்ய பயன்படுகிறது. சத்தான கஞ்சியாக காலை உணவுக்கு ஏற்றது.
பிற தகவல்கள் : நீர் அதிகம் தேங்கக் கூடிய இடங்களில் பயிர் செய்ய மிகவும் ஏற்றது. புகையான் மற்றும் கதிர்நாவாய்ப் பூச்சிக்கு எதிர்ப்புத் தன்மை கொண்டது. இதன் வைக்கோல் கூரை வேயப் பயன்படுகிறது.

**ஒட்டடை** (வெள்ளை அரிசி)
சாகுபடிக்கேற்ற பட்டம்: சம்பா பட்டம்
உழவியல் தன்மைகள் : 150 நாள் பயிர் சராசரி உயரம் 128 செ.மீ அதிகபட்ச உயரம் 153 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 147 நெல்மணிகள் 1000 நெல்மணிகளின் எடை 410 கிராம். வெள்ளை நிற மோட்டா அரிசி . மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1000 கிலோ நெல் மற்றும் 1800 கிலோ வைக்கோல்.
ஊட்டச்சத்து பண்புகள்: சாம்பல் சத்து மற்றும் புரதச்சத்து அதிகமாக உள்ளது. பொட்டாசியம், இரும்பு, மெக்னீஷியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் அதிக அளவில் உள்ளது.

**பால்குடைவாழை**
சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்
உழவியல் தன்மைகள்: 130 நாள் பயிர். சராசரி உயரம் 132 செ.மீ அதிகபட்ச உயரம் 140 செ.மீ. சாயும் தன்மையுடையது.
நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 89 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 20.0 கிராம். சிவப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 600 கிலோ நெல் மற்றும் 1300 கிலோ வைக்கோல் .
ஊட்டச்சத்து பண்புகள்: சாம்பல் சத்து அதிகமாக உள்ளது. இரும்பு, மெக்னீஷியம் மற்றும் துத்தநாகம் அதிக அளவில் உள்ளது.

**பிசினி**
சாகுபடிக்கேற்ற பட்டம்: சம்பா பட்டம்
உழவியல் தன்மைகள்: 130 நாள் பயிர். சராசரி உயரம் 102 செ.மீ அதிகபட்ச உயரம் 111 செ.மீ சாயும் தன்மையுடையது.
நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 150 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 19.0 கிராம். நெல்மணிகள் மஞ்சள் நிறத்தில் கருப்பு நிறக்கோடுகளுடனும் சிவப்பு நிறத்திலும் இருக்கும். மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1350 கிலோ நெல் மற்றும் 1500 கிலோ வைக்கோல்.
ஊட்டச்சத்து பண்புகள்: சாம்பல் சத்து மற்றும் புரத்சத்து அதிகமாக உள்ளது. இரும்பு, கால்சியம் மற்றும் மெக்னீஷியம் அதிக அளவில் உள்ளது.
சமையல் / உணவுகள்
தோசை மற்றும் புரதச் சத்து அதிகமாக உள்ளது. இரும்பு கால்சியம் மற்றும் மெக்னீஷியம் அதிக அளவில் உள்ளது.
சமையல் / உணவுகள்:
தோசை மற்றும் கஞ்சி செய்ய மிகவும் ஏற்றது மேலும் அவல் செய்வதற்கும் நன்றாக இருக்கும்.
பிற தகவல்கள்:
அதிக வறட்சியைத் தாங்கக்கூடியது. இந்த ரகத்தின் மணியில் கூர் உள்ளதால் தானியத்தைப் பிரித்தெடுக்கும் போது கவனமாகப் பிரித்தெடுப்பது

அவசியம். மணிகளில் பால்பிடிக்கும் சமயத்தில் மூடுபனி அதிகம் இருந்தால் அதிகமான மணிகள் பதாகிவிடும். இது இடுப்பு வலியைக் குறைக்க உதவுகிறது. மற்றும் பொதுவாக இளம் பெண்கள் பருவ வயதை அடைந்த பிறகு அந்த அரிசி உணவை சாப்பிடுவார்கள். இது மாதவிடாயுடன் தொடர்புடைய இடுப்பு வலியிலிருந்து விடுபட உதவுகிறது. மேலும் இது வலியில்லாத பிரசவத்திற்கும் கொடுக்கப்படுகிறது.

**பூம்பாளை**

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள்: 150 நாள் பயிர் சராசரி உயரம் 130 செ.மீ. அதிகபட்ச உயரம் 147 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை : 150 நெல்மணிகள்.1000 நெல்மணிகளின் எடை 400 கிராம், சிவப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1100 கிலோ நெல் மற்றும் 1800 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் சத்து அதிகமாக உள்ளது. பொட்டாசியம், இரும்பு, கால்சியம், மெக்னீஷியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள் : இட்லி, தோசை, அவல் போஹா மற்றும் பொரி செய்ய மிகவும் பொருத்தமானது.

**பூவன் சம்பா**

சாகுபடிக்கேற்ற பட்டம் : நவரைப் பட்டம்

உழவியல் தன்மைகள்: 145 நாள் பயிர், சராசரி உயரம் 125 செ.மீ அதிகபட்ச உயரம் 136 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை : 128 நெல் மணிகள்.

நெல்மணியின் இயல்புகள்: 1000 நெல்மணிகளின் எடை 300 கிராம். சிவப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1400 கிலோ நெல் மற்றும் 2200 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள்: சாம்பல் சத்து அதிகமாக உள்ளது. பொட்டாசியம், இரும்பு, கால்சியம், மெக்னிஷியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள்: இட்லி தோசை அவல்/ போஹா மற்றும் டொரி செய்ய மிகவும் பொருத்தமானது.

**பூவன் சம்பா**

சாகுபடிக்கேற்ற பட்டம்: நவரைப் பட்டம்

உழவியல் தன்மைகள்: 145 நாள் பயிர், சராசரி உயரம் 125 செ.மீ அதிகபட்ச உயரம் 136 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை 128 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 300 கிராம். சிவப்பு நிற மோட்டா அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு) 1400 கிலோ நெல் மற்றும் 2200 கிலோ வைக்கோல் .

ஊட்டச்சத்து பண்புகள்:

சாம்பல் சத்து அதிகமாக உள்ளது. பொட்டாசியம், இரும்பு, கால்சியம், மெக்னீஷியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் மிக அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள்:

சாப்பாட்டிற்கு ஏற்றது. முறுக்கு தயாரிக்க ஏற்றது. இந்த அரிசி நொறுக்கு திண்பண்டம் செய்யச் சிறந்தது.

**ரசகடம்**

சாகுபடிக்கேற்ற பட்டம் : நவரைப் பட்டம்

உழவியல் தன்மைகள் : 125 நாள் பயிர் சராசரி உயரம் 109 செ.மீ அதிகபட்ச உயரம் 120 செ.மீ சாயாத தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 155 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 19.0 கிராம், நெல்மணிகள் மஞ்சள் கலந்த சிவப்பு நிறமாகவும். அரிசி வெள்ளை நிறமாகவும் இருக்கும். சன்ன அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு) : 1125 கிலோ நெல் மற்றும் 1560 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள்: இரும்பு, கால்சியம், மெக்னீஷியம் மற்றும் துத்தநாகம் அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள் : சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம்.

பிற தகவல்கள்: இந்த ரகம் மலைப்பகுதிகளுக்கு மிகவும் ஏற்றது.

**சேலம் சம்பா**

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள் : 135 நாள் பயிர், சராசரி உயரம் 104 செ.மீ அதிகபட்ச உயரம் 107 செ.மீ சாயும்

தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை : 150 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 17.0 கிராம். நெல்மணிகள் மஞ்சள் கலந்த சிவப்பு நிறமாகவும் அரிசி வெள்ளை நிறமாகவும் இருக்கும். சன்ன அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு) : 1200 கிலோ நெல் மற்றும் 1800 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் மற்றும் புரதச் சத்து அதிகமாக உள்ளது. இரும்பு கால்சியம் மெக்னீஷியம் மற்றும் துத்தநாகம் அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள் : சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம்.

**சம்பா மோசனம்**

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள் : 170 நாள் பயிர் சராசரி உயரம் 138 செ.மீ. அதிகபட்ச உயரம் 152 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 200 நெல்மணிகள்.1000 நெல்மணிகளின் எடை 320 கிராம். நெல்மணிகள் வைக்கோல் நிறத்திலும் அரிசி சிவப்பு, நிறத்திலும் இருக்கும் மோட்டா அரிசி . மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1800 கிலோ நெல் மற்றும் 1950 கிலோ வைக்கோல்.

பெயர் காரணம் : மோசனம் என்று சொல்லுக்கு தாழ்வான பகுதி என்று பொருள் தாழ்வான வயல்களில் அல்லது வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் பயிரிட ஏற்றதால் இந்த பெயர் பெற்றது. மேலும் இந்த ரகத்திற்கு புழுதிக்கால் . ஏரி நெல் மற்றும் மடுவு முழுங்கி போன்ற பிற பெயர்களும் உண்டு.

ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் மற்றும் புரதச் சத்து அதிகமாக உள்ளது. இரும்பு, மெக்னீஷியம் மற்றும் துத்தநாகம் அதிக அளவில் உள்ளது. கால்சியம் மிக அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள் : இந்த வகை அரிசி அவல், இட்லி மற்றும் தோசை செய்ய ஏற்றது.

**சன்ன சம்பா**

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா பட்டம்

உழவியல் தன்மைகள் : 140 நாள் பயிர், சராசரி உயரம் 144 செ.மீ அதிகபட்ச உயரம் 155 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 260 நெல்மணிகள்.1000 நெல்மணிகளின் எடை 270 கிராம். நெல்மணிகள் வெளிர் மஞ்சள் நிறத்திலும். அரிசி வெளிர் பழுப்பு நிறத்திலும் இருக்கும். சன்ன அரிசி. மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1800 கிலோ நெல் மற்றும் 2000 கிலோ வைக்கோல்.

ஊட்டச்சத்து பண்புகள் : சாம்பல் புரதச் சத்து அதிகமாக உள்ளது. கால்சியம் மற்றும் துத்தநாகம் அதிக அளவில் உள்ளது.

சமையல் / உணவுகள் : இந்த ரக அரிசி இட்லி மற்றும் தோசை செய்ய ஏற்றது. மேலும், இது சாப்பாட்டிற்கு ஏற்ற ரகம்.

**சீரக சம்பா**

சாகுபடிக்கேற்ற பட்டம் : சம்பா மற்றும் நவரைப் பட்டம்

உழவியல் தன்மைகள் : 130 நாள் பயிர் சராசரி உயரம் 80 செ.மீ அதிகபட்ச உயரம் 93 செ.மீ சாயும் தன்மையுடையது. நெற்கதிரில் உள்ள மணிகளின் எண்ணிக்கை: 170 நெல்மணிகள். 1000 நெல்மணிகளின் எடை 22.0 கிராம். நெல்மணிகள் வைக்கோல் நிறத்திலும் அரிசி வெள்ளை நிறத்திலும் இருக்கும். மிகவும் சன்ன மற்றும் வாசனை அரிசி.

மகசூல் (ஒரு ஏக்கருக்கு): 1500 கிலோ நெல் மற்றும் 1050 கிலோ வைக்கோல்.

பெயர் காரணம் : இந்த வகை அரிசி சீரகத்தின் வடிவத்தை ஒத்திருப்பதால் இதற்கு சீரக சம்பா என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

ஊட்டச்சத்து பண்புகள் : பொட்டாசியம், இரும்பு, மெக்னீஷியம், துத்தநாகம் மற்றும் பாஸ்பரஸ் அதிகமாக உள்ளது.

சமையல் / உணவுகள் : இந்த அரிசி மிகவும் சன்னமாகவும், வாசனை உடையதாகவும் இருப்பதால் பிரியாணி செய்வதற்கு சிறந்தது.

பிற தகவல்கள் : இதைப் பயிர் செய்யும். இடத்தில் தண்ணீர் அதிகம் தேங்கக் கூடாது. வாசனை ரகமாதலால் அதிக விலை கிடைக்கிறது. தமிழகத்தின் பாரம்பரிய ரகங்களிலேயே அதிக விலை கிடைக்கக்கூடிய ரகம்.

மேலும் விவரங்களுக்கு:

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்
பி–3 ராஜலக்ஷ்மி காம்ப்ளக்ஸ், 2 வது தளம், எண்: 18
சேமியர்ஸ்சாலை, நந்தனம், சென்னை – 600035
தொலைபேசி : 044–42188011

## பிறக்கும் குழந்தை கரப்பான், பொடுகு போன்ற பிரச்சனையில்லாமலிருக்க

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பகுதியில் கர்ப்பமான பெண்களுக்கு (4–5 மாத கர்ப்பம்) செந்தட்டி செடியின் வேரை அரைத்து பாரம்பரிய நெல் ரகத்தில் உமியை நீக்கி அரிசியை குத்தி (தவுட்டுடன்) பின்னர் இதை களி மாதிரி கிண்டி தருவர். இதனை சாப்பிட்டால் பிறக்கும் குழந்தைக்கு கரப்பான், பொடுகு போன்ற சரும நோய்கள் உண்டாவதில்லை.

தமிழரசி
உலையூர், திருவரங்கம் வழி
முதுகுளத்தூர் தாலுகா
இராமநாதபுரம் மாவட்டம்

## மானாவாரியில் வரவிதைப்பாக நெல் விதைத்தல்



இராமநாதபுரம் மாவட்டத்தில் மானவாரியில் நெல் பயிரிடப்படுகிறது. முன்பு பாரம்பரிய இரகங்களான சித்திரைக்கார், குழியடிச்சான், 110, குருவை களஞ்சியன் போன்ற ரகங்களை வைத்து சாகுபடி செய்தனர். தற்சமயம் சம்பா நெல், நவீனரகங்களை மக்கள் அதிகளவில் பயன்படுத்துகின்றனர். விதை அளவு ஏக்கருக்கு 35–40 கிலோ விதைக்கின்றனர். நிலம் உழவு செய்யப்பட்டு விதைப்பு செய்யப்படுகிறது. பெய்யும் மழை நீரில் முளைத்து விடும். முளைத்த பின் 15 நாட்களில் மழையில்லையெனில் கன்மாய் நீர் அல்லது பண்ணைக் குட்டை நீர், போர் நீர் கொண்டு நீர்பாசனம் செய்யலாம். நெல்வயலின் பொலியில் குதிரைவாலி விதைப்பர். குதிரைவாலி விரைவில் (70 நாட்களில்) அறுவடைக்கு வரும். இதனை அரிசியாக்கி சாதம் செய்து உண்பர். நெல் அரிசி வரும் வரை இடைப்பட்ட காலத்தில் ஏற்படும் உணவுப்பற்றாக்குறைக்கு குதிரைவாலி சாதம் சமையல் செய்து உண்பர். குதிரைவாலியை பொலியோரத்தில் விதைத்து பயிர் செய்வதால் ஆடு, மாடுகள், பூச்சிகள் நெற்பயிரை சேதமாகமால் காக்கும் பயிராகவும் விளங்கும்.

சிங்காரவேலு
ஆலங்குளம், கடலாடி, முதுகுளத்தூர் தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம், செல் : 9787609544

## மின்னிதழை கால்நடை தீவனம் & பசுந்தாள் உரப்பயிர்

இராமநாதபுர மாவட்டத்தில், நெல் அறுவடைக்கு பின் மாசி, பங்குனியில் ஈரப்பதத்தில் மின்னிதழை விதைக்கப்படுகிறது. ஓர் ஏக்கருக்கு சுமார் 3 படி (சுமார் 5 கிலோ விதைப்பார்கள். இது மாட்டிற்கு தீவனப்பயிராகவும் பயிர் செய்யப்படுகிறது. இந்த தழையை பூ பூக்கும் சமயம் தரை மட்டத்தில் அறுத்து ஆடு, மாடுகளுக்கு தீவனமாக கொடுக்கலாம். இதனுடை அடித்தண்டு பகுதி, வேர் பகுதி நிலத்துடன் சேர்ந்து உழுகப்படுவதால் இது மண்ணிற்கு தழை சத்தினை தரும். இந்த வழக்கம் சில கிராமங்களில் குறிப்பாக நல்ல கன்மாய் பாசன வசதி உள்ள பகுதிகளில் காணப்படுகிறது. கட்டுப்பாடான மேய்ச்சல் மின்னிதழை வளர்ச்சிக்கு உதவும்.

மாணிக்கம்
உலையூர், திருவரங்கம் வழி, முதுகுளத்தூர் தாலுகா
இராமநாதபுர மாவட்டம், செல் : 9843678535

## செந்தில்குமாரின் இயற்கை கொய்யா தோப்பு



திரு. செந்தில்குமார் (வயது 49) பி.எஸ்.ஸி வரை படித்துவிட்டு தற்சமயம் திருவள்ளூர் மாவட்டத்தில் தண்ணீர்குளம் கிராமத்தில் இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். இவருக்கு சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது. தனது நண்பர் மூலம் தண்ணீர்குளம் கிராமத்தில் 10 ஏக்கர் நிலம் குத்தகைக்கு வாங்கி இதில் கொய்யா சாகுபடி செய்து வருகிறார். இவர் கடந்த 2 ஆண்டுகளாக இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். இவருக்கு உறுதுணையாக இவரது மனைவியும், மைத்துனரும் உள்ளனர். இவர் கடைபிடிக்கும் சாகுபடி முறைகள் பின் வருமாறு. கொய்யா 6X6 அடியில் நடவு செய்யப்பட்டுள்ளன.

இவர் கொய்யாவிற்கு சொட்டுநீர் பாசனம் செய்கிறார். குழாய் மூலம் ஈம், தொல்லுயிர், ஜீவாமிருதம் கரைசல், வேஸ்ட் டீ கம்போஸர், போன்றவற்றை 10 நாட்களுக்கு ஒரு தடவை கொடுக்கிறார். நீர் பாய்ந்து முடியும் தருவாயில் சொட்டு நீரில் இக்கரைசல்களை கலந்து விடுகிறார். மீன் அமினோ அமிலத்தை தெளிப்பன் மூலம் தெளிக்கிறார். 10 ஏக்கர் நிலத்தில் நீரில் கலந்து விட 1200 லிட்டர் ஜீவாமிருத கரைசலை பயன்படுத்துகிறார். சென்ற வருடம் பெய்த கனமழையினால் கொய்யாக்களில் பூக்கள் கொட்டி விட்டது. இந்த வருடம் மகசூல் குறைந்துள்ளது.

முன்பு நாள் ஒன்றுக்கு 200 கிலோ கொய்யா கிடைத்து வந்தது. தற்சமயம் மழை சேதாரத்தால் 50 கிலோ கிடைக்கின்றது. கொய்யாத் தோப்பில் கிளித்தொல்லையால் பாதிப்பு உண்டானது. கிளியை விரட்ட என்ன வழி என்று பார்த்து வருகிறார்.

கொய்யா ஒரு கிலோ ரூ. 60–80 வரை விற்பனை செய்கிறார். கொய்யாவை வியாபாரிகளிடம் விற்காமல் உள்ளூர் ஆட்கள் அல்லது வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கிறார். கொய்யா ஜாம் ரூ. 380 ஒரு பாட்டில். கொய்யாதூள் ரூ. 30 (50 கிராம்). குத்தகை பணம் ரூ. 20,000 வருடத்திற்கு செலுத்தி வருகிறார்.

கே. செந்தில்குமார்
இயற்கை கொய்யா தோப்பு
தண்ணீர்குளம், திருவள்ளூர் மாவட்டம்
செல் : 7373095548

## நெல் களை எடுப்பான் மற்றும் உரமிடும் கருவி

நெல்லில் நட்ட பின் ஒரு மாதத்திற்குள் களை எடுக்கும் கருவியை திரு. சுசீந்திரன் உருவாக்கி இருந்தார். இதனை மர சட்டத்தின் மூலம் கட்டுகம்பிகளை முறுக்கி பன்னியிருந்தார். இந்த கருவியை கோயம்புத்தூர் சமுதாய தொழில் கூடத்தில் (தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை தொழிற்கூடம்)



திரு. வெங்கட் இதனை இரும்பு பைப் கொண்டு வடிவமைத்துள்ளார். இத்துடன் இதில் பஞ்சகவ்யா, அமிர்த கரைசல் ஊற்றி சொட்டு சொட்டாக நிலத்தில் விடலாம். இதனுடைய விலை ரூ. 2,500– 3000 வரை ஆகும்.

எம். சுசீந்தர்
த/பெ. முருகவேல், பெண்ணாடம் ரோடு, விருத்தாச்சலம் –6066001
கடலூர் மாவட்டம், செல் : 9952637722
தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை தொழிற்கூடம்
தொடர்பு எண் : 9944284440

## வாசகர் வட்டம்

### தென்னை மர பிரச்சனைக்கு தீர்வு

எங்களிடம் 400 தென்னை மரங்கள் உள்ளன. மரங்கள் நட்டு 5 வருடங்களாகின்றன. அடிக்கடி குரும்பை விழுகின்றது. சரியாகக் காய்பிடிக்கவில்லை. கற்றாழை பூச்சியும் விழுகின்றது காண்டா மிருக வண்டுகள் தொல்லையும் உள்ளது. இதற்கு பின்பற்ற வேண்டிய வழி முறையைக் கூறவும்.

–ஹேமலட்சுமி, கம்பம், தேனி மாவட்டம்

இதற்கு மூலிகைபூச்சி விரட்டி தயார் செய்து தென்னை மரத்தில் குருத்தில் 1/2 லிட்டர் (3 லிட்டர் நீரில் கலந்து) ஊற்ற வேண்டும். இதனை 2 மாதங்களுக்கு ஒரு முறை செய்து வர வேண்டும். பின்னர் 4 மாதங்களுக்கு ஒரு முறை செய்து வரலாம். கற்றாழைப்பூச்சிக்கும், குறும்பை கொட்டுவதற்கும் மூலிகை பூச்சி விரட்டி மருந்தை 500 மி.லியை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். இதனை 15 நாட்களுக்குகொரு முறை செய்து வரலாம்.

செல்லமுத்து
கருக்கம்பாளையம் , ஈரோடு மாவட்டம்
செல் : 9486602389

## தென்னையில் எலிகளினால் காய்கள் உதிர்வதற்கு



தென்னை மரங்களில் காட்டு எலிகள் ஏறி பிஞ்சு காய்களை துளை போட்டு உறிஞ்சி விடுவதால் காய்கள் அதிகமாக சேதரமாகின்றன. இதற்கு தென்னை மரங்களில் சுமார் 10 அடி உயரத்தில் தகர வளையம் (3X1.5 அடி தகரத்தை வளைத்து 1.5 அடி நீளத்தில் 1/2 இஞ்சி ஆனி அடித்து வைக்கலாம்). படத்தில் காட்டியபடி வைத்து விட்டால் எலிகள் இதன் மேல் ஏறி செல்ல முடியாது. இதனால் காய்கள் சேதரமாகாமல் தடுக்கப்படும். இதற்கு செலவு அதிகமாகாது.

ஜெயகிருஷ்ணன்
அந்தியூர், ஈரோடு மாவட்டம்
செல் : 9486314020

## மருத்துவரில்லா மாட்டு பண்ணை

எங்கள் பண்ணையில் 300 கிர் இன நாட்டு மாடுகள் உள்ளன. நித்தம் சுமார் 350 லிட்டர் பால் கறந்து சென்னையில் சுத்த நாட்டு மாட்டு பால் தரத்தில் விநியோகிக்கின்றோம். இனப்பெருக்கத்திற்கு



காளைகள் உள்ளன. பண்ணையில் இயற்கை சூழலில் மாடுகள் பராமரிக்கப்படுகின்றன. மாதம் ஒரு முறை மூலிகை மசாலா உருண்டை தயார் செய்து கொடுக்கின்றோம். மூலிகை மசாலா உருண்டை கொடுத்த 10 நாட்களில் மூலிகை குடற்புழுநீக்க மருந்து கொடுத்து வருகிறோம். மதுரை சேவா நிறுவனம் மூலம் பயிற்சி எடுத்த பின் நாங்களே மூலிகை மருந்து தயாரித்து கொடுக்கின்றோம். பொதுவாக மாட்டு டாக்டரிடம் சென்று மருந்து, தடுப்பூசி போடுவது இல்லை. இதனால் பராமரிப்பு செலவு குறைந்துள்ளது. தற்பொழுது எங்களிடம் வயதான மாடுகள், அதிக காளை கன்றுகள் உள்ளதால் பராமரிப்பு செலவு அதிகமாகியுள்ளது.
கடந்த 2 மாதங்களில் மழை பெய்து கோமாரி நோய் எங்கள் பகுதியில் ஊர் மாடுகளுக்கு வந்து விட்டது. நாங்கள் மாதம் தோறும் மூலிகை மசாலா உருண்டை கொடுத்து வருவதால் கோமாரி நோய் எங்கள் பண்ணைக்கு பரவவில்லை.

ரஞ்சித்
கல்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்
செல் :9345398238

**ஊடு பயிர் சாகுபடி**

நான் 25 செண்டு நிலத்தில் சம்மங்கி பூ கிழங்கு நடவில் கொத்தமல்லி மற்றும் செண்டு மல்லியினை ஊடுபயிராக சாகுபடி செய்து உள்ளேன்.

30 நாட்களில் கொத்தமல்லி கீரையாக அறுவடை செய்து விற்று விடலாம். 90 நாட்களில் செண்டு மல்லி அறுவடை செய்யலாம். கொத்தமல்லி 800 கட்டு 1 கட்டின் விலை ரூ. 10 செண்டு மல்லி 800 கிலோ. 1 கிலோ ரூ. 30. சம்மங்கி 6 மாதத்திற்கு பின் பூ கிடைக்கும். சம்மங்கி சாகுபடிக்கு பயன்படுத்திய எரு மற்றும் தண்ணீரே மற்ற ஊடுப்பயிர்களுக்கும் போதுமானதாக உள்ளதால் அதிலும் செலவு மிச்சம் ஆகிறது. குறைந்த நிலம் உள்ளதால் ஊடுபயிர் செய்து கணிசமான லாபம் கிடைக்கிறது. மற்ற விவசாயிகளும் இதை கடைப்பிடித்து கணிசமான வருவாய் ஈட்ட முடியும்.

**புதிய துவரை சாகுபடி**

சேவா மூலம் புதிய துவரை ரகத்தை சாகுபடி செய்தேன். இதில் எனக்கு கிடைத்த விதைகளை 25 கிராம் வீதம் 15 நபர்களுக்கு கொடுத்தேன். மீதி விதையை நான் சாகுபடி செய்தேன். இயற்கையை சார்ந்த பூச்சி விரட்டியை பயன்படுத்தினேன். காயில் 56 விதைகள் இருந்தது. முதல் அறுவடையில் ஒரு செடியில் 600 லிருந்து 900 கிராம் விதை கிடைத்தது. இரண்டாம் முறை அறுவடையில் 500 லிருந்து 600 கிராம் விதை கிடைத்தது. 27 கிலோ விதை கிடைத்தது. ஒரு கிலோ வீதம் 20 விவசாயிகள் விதைப்புக்காக 1 கிலோ ரூ. 50 வீதம் பெற்று கொண்டனர்.

**விஷச்செடி சாப்பிட்ட மாட்டுக்கு**

எனது பசு கிடாரி 6 மாத சினை. செவ்வரளி செடியை சாப்பிட்டு விட்டது. 2 நாள் வயிர் உப்பிசம். அசை போட வில்லை. வைத்தியர் மாடு பிளைப்பது அபூர்வம் என கூறிவிட்டார். புதிய சிந்தனையாக வாழைப்பூ 2, காய்ந்த மிளகாய் 25, ஓமத்திரவம் தண்ணீர் 1லிட்டர். கசகசா 50 கிராம், வெந்தயம் 50 கிராம் நன்றாக அரைத்து மாட்டிற்கும் கொடுத்தேன். மாடு தெளிவடைந்தது. 3 மணி நேரத்தில் அசை போட ஆரம்பித்தது. இரண்டாம் முறையாக முன்பு சொல்லப்பட்ட பொருட்களை பயன்படுத்தினேன். இதனால் அரளி செடி விஷத்தன்மை நீங்கியது.

ஆ.கந்தசாமி
டி.முருங்கப்பட்டி அஞ்சல், துறையூர் தாலுகா
திருச்சி மாவட்டம் – 621012,
செல்: 9944526809, 6374220450

## ஒடைபட்டி பொன்னுச்சாமி அமரரானார்

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தாலுகா, ஓடைபட்டி வைத்யர் பொன்னுச்சாமி ஏப்ரல் மாதம் 30 தேதி அதிகாலை காலமாகி விட்டார். இவருக்கு வயது 82. இவர் ஆரம்ப பள்ளி கூடம் 5 மாதங்கள் சென்று பின் நின்று விட்டார். இவர் இளம் வயதிலிருந்தே தான் பார்க்கும் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து வருவார். இதனால் இவரை விஞ்ஞானி என்று கூறுவர். இவர் செய்யும் ஆராய்ச்சிகளுக்கு தான் பராமரித்து வரும் ஆடுகளை விற்று செலவு செய்வார். இவர் செம்மறி ஆடுகளுக்கு வரும் நீலநாக்கு நோய்க்கு மூலிகை வைத்யம் செய்யும் முறையை அனுபவத்தில் கண்டறிந்து விளக்கம் கொடுத்துள்ளார். இவர் நிலக்கடலை பிடுங்கும் கருவி, காய்கறி வெட்டும் கருவி, போன்றவைகளின் முன் மாதிரியை வடிவமைத்து வைத்துள்ளார். மற்றும் இயற்கை கொசு விரட்டி மூலிகை மருந்துக்கு தேசிய கண்டுபிடிப்பு நிறுவனம் மூலம் காப்புரிமை பெற்றுள்ளார். இவர் சில வைத்ய முறைகளை சித்தர்களின் பாடல்கள் மூலம் மேற்கோள் காட்டுவார்.

அறுபத்தி நாலு வகை நஞ்சுக்கு நீலி
ஆவாரம் பூவோட நீர் கடுப்பு காலி
இரத்த இருமலை இம்பூரா வெல்லும்
ஈறு பேன் நாய் துளசி கொல்லும்
உடல் வலுவுக்கு எள்ளு
ஊழை சதைக்கு கொள்ளு
எலுமிச்சையால் அடங்கும் காமம்
ஏப்பத்தை அடக்கும் ஓமம்
ஒடிந்த எலும்புக்கு சதை யொட்டி
ஓயாத பவுத்திரத்திற்கு எட்டி

**நஞ்சு முறிக்க நீலி செடி**

எங்களுடைய நாய்க்கு சொறி, சிரங்கு ஊரல் அதிகமாக இருந்தது. இதை பார்த்த என் மகன் பொன் சர்ச்சில் விஷத்துக்கு விஷம் தீரும் என்று நினைத்து கண்வலிக் கிழங்கை அரைத்து பாலுடன் சேர்த்து நாய்க்கு கொடுத்து விட நாய் அந்த பாலை குடித்தது.

இதனால் கழிச்சலாகி உயிர் பிழைக்க முடியாத சூழ்நிலையில் மேற்கண்ட பாடலின் படி நீலி வேரையும் 10 மிளகையும் சேர்த்து அரைத்து நாய்க்கு வாயில் ஊற்றி விட நாய் பிழைத்து கொண்டது. ஆனால் மேற்படி சொறி, சிரங்கு, ஊரல் எதுவும் தீரவில்லை. மேற்கண்ட நீலியும் மிளகும் எப்படிப்பட்ட விஷத்தையும் தீர்த்துவிடும். விஷத்தை முறித்து உயிர் பிழைக்க வைக்கும்.

**சுடுகாடு மீட்டான் பாடல்**

காட்டெருவை சுட்டு சாம்பல் ஆக்கி
கடுகளவே சாம்பல் நிறுத்தெடுத்து
ஓட்டியே மிளகுடன் எருக்களை பால்
ஒன்பது சாமம் விட்டரைத்து
நாட்டியே நாசியில் விட்டிடவே
நமனிடம் போன உயிர் திரும்பிடுமே

விளக்கம் :

நாட்டு மாட்டுச்சாணத்தை (கரையான் பிடிக்காத) சுத்தம் செய்து (ஓட்டில்), வாயகன்ற மண் சட்டியிலிட்டு வறுத்து சாம்பல் ஆக்கி சலித்து (வடிகட்டி) எடுத்து மிளகு 20 மிளகு எடுத்து அரைத்து பவுடராக்கி சாம்பலில் கலந்து எருக்களை பால் ஒரு சிரட்டையில் பிடித்து சேர்த்து அரைக்க கல்வத்தில் பிடிக்கும். மறுபடியும் எருக்களை பால் விட நெகிழும். இப்படியே ஒன்பது சாமம் அரைத்து குளிகை ஆக்கி அதை சுண்டல் அளவு குளிகை ஆக்கி காற்றுபுகாத வண்ணம் மூடி அரக்கிட்டு வைத்திருக்கவும். யாருக்கு பாம்பு கடித்தாலும் குளிகையை வெண்ணீரில் கரைத்து பாம்பு கடிபட்ட நபரை கால்மேலேயும் தலை தாழ்ந்திருக்க (நாசி) மூக்கில் பிழிய சுடுகாட்டில் வைத்த பிணம் எழுந்து உயிருடன் வருமாம். பத்தியம் இல்லாத மருந்து. அதற்கு மேல் டாக்டரிடம் போகவும். இந்த குளிகையை ஒன்பது சாமம் மனிதனுள் அரைப்பதற்கு இரண்டு ஆள் வேண்டும். அதற்கு பதிலாக மிக்சி அல்லது கிரைண்டரில் அரைக்கவும். 9 சாமத்தை கணக்கிட்டால் 1 மணி அல்லது 2 மணி நேரத்தில் குளிகை பதத்திற்கு வந்து விடும்.

**வைக்கோலை மதிப்பு கூட்டுதல்**

வைக்கோலை நறுக்கி தூளாக்கி இத்துடன் தாதுப்பு கலவை குறிப்பிட்ட அளவு சேர்த்து ஆடு, மாடுகளுக்கு தீவனமாக கொடுத்து வருகிறேன். இதில் நல்ல பலன் கிடைக்கிறது. இதனை அதிகளவில் தயார் செய்து விநியோகிக்க பொருளாதார நிதி உதவியை நாடி வருகிறேன். வைக்கோலை நறுக்கிதூளாக்கி இத்துடன் தாதுப்பு கலவை குறிப்பிட்ட அளவு சேர்த்து ஆடு, மாடுகளுக்கு தீவனமாக கொடுத்து விற்பனை செய்ய பொருளாதார நிதி உதவியை நாடி வருறேன்.

எம்.பத்திநாதன், த/பெ.முத்துசாமி,
செல்லியம்பட்டி அஞ்சல், பலகோடு தாலுகா,
தர்மபுரி மாவட்டம் – 636809. செல் : 9488749435

**கோமாரி நோய்க்கு**

எங்களுடைய மாட்டு பண்ணையில் 5 கலப்பின ஜெர்சி மாடுகள் உள்ளன. இந்த மாடுகளுக்கு நவம்பர் (2021) மாதத்தில் கால்காணை, வாய்காணை நோய் வந்து விட்டன. இதற்கு பூவன் வாழைப்பழத்தை நல்லெண்ணெயில் கலந்து கொடுத்தோம். 3 நாட்களில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. இத்துடன் தேங்காய், வெல்லம், மஞ்சள், பூண்டு, மிளகு, சீரகம், சோற்றுகற்றாழை ஒரு தடவை அரைத்து கொடுத்தோம். தாங்கள் அனுப்பி வைத்த கால்நடை மூலிகை வைத்ய புத்தகத் திற்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

சுஜாதா, படப்பை, சென்னை. செல் : 9841765105

**கோழி வெள்ளைக்கழிச்சலுக்கு**

கீழாநெல்லி இலைச்சாற்றை அரிசி குருணையோடு கலந்து கொடுப்பேன். பப்பாளி இலை, வேப்பஇலை, நொச்சிஇலை இலைகளை சுமார் 2 லிட்டர் நீரில் கொதிக்கவைத்து பின்னர் இறக்கி மஞ்சள் தூள் சேர்த்து விடுவேன். இதை குடிநீராகக் கோழிகளுக்கு தர கோழி தானாக குடித்து விடும். பருவநிலை மாறும் சமயம் ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு எலுமிச்சம் பழச்சாற்றை கலந்து குடிக்க தருவேன். கீழாநெல்லி இலைச்சாற்றை அரிசி குருணையோடு கலந்து கொடுப்பேன். இதனால் கால்நடை டாக்டரை அணுகி செலவழிக்கத் தேவையில்லை.

சேகர்,
த/பெ. பொம்மன்,
கீழப்பட்டி, இராசிங்கபுரம் அஞ்சல், தேனிமாவட்டம்.
செல் : 9003465510

**மாட்டு புண்ணுக்கு**

எந்த புண் ஆனாலும் அல்லது புழு வைத்த புண்ணுக்கு சீத்தாப்பழ விதைகளை பாலிலிட்டு அரைத்து வரும் சாற்றை புண்ணில் விட வேண்டும். வெட்டுக்காயப்பூண்டு தழையையும் அரைத்து புண்ணுக்கு அந்த சாற்றை விட்டு வர வேண்டும்.

**கால் புண், வாய்புண், கோமாரி நோய்க்கு**

ஆடு, மாடுகளுக்கு வரும் கோமாரி நோய் புண்ணுக்கு திருநீற்று பச்சிலை, சீமைக்கருவேல் இலை, வெள்ளபூண்டு அரைத்து தடவ வேண்டும்.

சகராம்பாய், தாடியா கிராமம்
சுரேந்திர நகர் மாவட்டம், குஜராத்

**கோ பத்ம விரத மகிமை**

ஆடி மாதத்தின் சுக்லபட்ச ஏகாதசி அன்று ஆரம்பித்து கார்த்திகை மாத சுக்லபட்ச துவாதசி வரை இந்த கோ பத்ம விரதத்தை அனுசரிக்க வேண்டும். பிரதி தினமும் மாட்டுத் தொழுவத்தில் கோமயத்தினால் சுத்தம் செய்து, பசுவின் படத்தை வரைந்து அதன் மீது 33 என்ற எண்ணிக்கையில் பூக்களைப் (கோலம்) போட்டு புஷ்பங்களால் அலங்கரிக்க வேண்டும்.



இதனை நான் ஒரு நாளில் மட்டும் அதாவது கார்த்திகை மாதம் சுக்லா பட்ச ஏகாதேசி அன்று அதிகாலையில் வீட்டில் போட்டேன். போட்ட அன்றே எங்களுடைய நண்பர் ஒருவர் எங்களுக்கு சுமார் 5 கிலோ நாட்டு மாட்டு நெய் இலவசமாக கொடுத்தார்.

சகுந்தலா,
45, டிபிளம் நகர் ,
விராட்டிபத்து செல் : 7502742485

**சளிக்கு நாட்டு மாட்டு பால்**

எங்கள் குடும்பத்தில் அனைவருக்கும் சளி பிரச்சனை இருந்து வந்தது. திண்டுக்கல் அருகே மகரிஷி வித்யா மந்திர் பள்ளியில் கிர் மாட்டு பண்ணை உள்ளது. அங்கு சென்று 1 லிட்டர் பால் வாங்கி வந்து காய்ச்சி வீட்டில் உள்ளோர் அனைவரும் ஒரு நாள் மட்டும் சாப்பிட சளி மறைந்து விட்டது.

பாலகிருஷ்ணன், ஆடிட்டர், திண்டுக்கல்
செல் : 9442100689

## ஸ்ரீ பாலாஜி மூலிகை சத்து மாவு தயாரிப்பு

கரூர் மாவட்டம், தான்தோன்றிமலை கிராமத்தில் மாரியம்மாள் (வயது 38 ) வசித்து வருகிறார். இவர் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் முதலில் சென்னையில் சேல்ஸ் மேனாக வேலை பார்த்து வந்தார். பிறகு தானே சொந்தமாக 2013 ஆம் ஆண்டு பாரம்பரிய உணவு தயாரிக்க ஆரம்பித்தார். இவர் 265 வகையான உணவு, மூலிகை தயாரிப்புகளை தயாரித்து விநியோகம் செய்கிறார். மக்கள் அனைவரும் நன்றாக உள்ளது என்று ஆடர் கொடுக்கிறார்கள். லட்டு தயாரிப்பில் நெய், எண்ணெய் இல்லாமல் வெல்லம், நாட்டு சர்க்கரை வைத்து தயாரிக்கப்படுகிறது. இன்னும் பாரம்பரிய அரிசி, பாரம்பரிய சிறுதானியம், பயிர் வகைகள், கொட்டை வகைகள், விதைகள் , மூங்கில் அரிசி, கருப்பு கவுனி, முருங்கை விதை, அமுக்கிராகிழங்கு நிறைய விதமான பொருட்கள் அடங்கிய சத்துமாவு தயாரிக்கிறார். இந்த சத்து மாவை ஒருவருக்கு 2 ஸ்பூன் மாவு வீதம் தண்ணீரில் கலந்து 2 நிமிடம் கொதிக்க வைத்தால் சத்து மாவு கூழ் தயாராகி விடும். அதில் அவரவர் விருப்பப்படி இனிப்பு அல்லது உப்பு அல்லது உப்பு, மிளகுபொடி சேர்த்து பருகலாம். எதுவும் கலக்காமல் அப்படியேகூட குடிக்கலாம். காலையில் 2 டம்ளர் சத்துமாவு பானம் குடித்தால் காலை சாப்பாடு பூர்த்தியாகி விடும். இதன் மூலம்

உடலுக்கு தேவையான சத்துகள் மற்றும் சக்தி கிடைக்கிறது. கார்போஹைட்ரேட் கொழுப்பு குறைவாக இருப்பதால் உடல் பெருக்காது. உடல் எடையை குறைக்க உதவுகிறது. குழந்தைகளுக்கு ஏற்ற உணவு, காலை, மாலை வேளைகளில் அவர்களுக்கு தரலாம். முதியோர்கள் இதை அருந்தும் போது உடனடி சக்தி கிடைப்பதை உணர முடியும். எளிதில் ஜீரணிக்க கூடிய உணவு. இவர் காரட் மால்ட், மல்டிவிட்டமின் மால்ட், பீட்ரூட் மால்ட், செவ்வாழை மால்ட் போன்றவை தயாரிக்கிறார்.

ஸ்ரீ பாலாஜி இயற்கை அங்காடி
தாந்தோன்றிமலை
கரூர் மாவட்டம்
செல் : 8807952015, 9865649202

## மின்னிப்பயறு விதைப்பும் இயற்கை உரமும்



நெல் அறுவடை நடக்கும் சமயம் ஈரப்பதத்தில் மின்னிப்பயறு விதைக்கப்படுகிறது. நெல் அறுவடைக்குப் பின்னர் இது முளைத்து பயிராகும். இது பூ வெடுத்து நெத்துக்கள் கொடுக்கும். இதனை விதைக்காக சேகரித்து வைப்பர். உணவிற்கும் குழம்பு வைக்க பயன்படுத்துவர். இதனை கால்நடைகளுக்கும் அறுத்து பசுந்தீவனமாகக் கொடுப்போம். நெல் வயலுக்கும் பசுந்தாள் உரமாகும். இதே போன்று வரப்பில் குதிரைவாலியும் வயலில் கேழ்வரகும் ஆவனியில் விதைத்து கார்த்திகையில் அறுவடை செய்வோம்.

ஆறுமுகவள்ளி
தேர்த்தாங்கால்
குளத்தூர் அஞ்சல்
இராமநாதபுரம் மாவட்டம்.

## மாடுகளுக்கு ஜீரணக்கோளாறுகளுக்கு



எங்கள் வீட்டில் எங்கள் பாட்டி சொல்லிய முறையில் இயற்கையாக ஜீரண மருந்து தயாரித்து மாடுகளுக்கு வாரத்திற்கு ஒரு முறை அளித்து வருகிறோம். இதற்கு சாதாரண உப்பு 1 கிலோ, ஓமம் 100 கிராம், ஹிமாலயா பத்திசா 1 கிலோ, பெருங்காயம் 10 கிராம் சேர்த்து அரைக்க வேண்டும். இதனை 1 லிட்டர் கடுகு எண்ணெயில் 1/4 மணி நேரம் காய்ச்சி வைத்து கொள்ள வேண்டும். இதனை மாடுகளுக்கு சுமார் 50 கிராம் அளவு வாரத்திற்கு ஒரு முறை கொடுத்து வருகிறோம். இதனால் அஜீரணம் பிரச்சனை இல்லாமல் மாடுகள் ஆரோக்கியமாகவும் உள்ளன.

அனிதாகுமாரி
டாங்க், பேஜ்நாத் மாவட்டம்
ஹிமாசலபிரதேஷ், செல் : 8219099118

## பைனாப்பிள் இலை தீவனம்



பைனாப்பிள் 4 வருடங்கள் வரை காய்ப்பு தரும் . பின்னர் காய்க்காது. காய்த்த செடிகளை விவசாயிகள் அப்புறப்படுத்தி தீவைப்பர். இந்த செடிகளை சிறு சிறு துண்டுகளாக தீவனம் வெட்டும் மிஷினில் வெட்டி ஒரு கிலோ ரூ. 3க்கு கிடைக்கிறது. இதனை ஆடு, மாடுகளுக்குத் தீவனமாகக் கொடுத்து வருகிறேன். மாட்டிற்கு ஒரு நாளைக்கு 10 கிலோ தரலாம். இதனால் பால் கறக்கும் திறன் கூடும்.

### காட்டு இஞ்சி

எங்கள் பகுதியில் ஒவ்வொரு விவசாயியின் தோட்டத்தில் காட்டு இஞ்சி சில செடிகள் வளர்ப்பர். இந்த காட்டு இஞ்சியை தட்டி மிளகு, உப்பு, பேரிக்காய் இலை சேர்த்து அரைத்து நீரில் கலந்து கொடுக்க மாட்டிற்கு தீனி தின்னாமை, வயிறு உப்பிசம் போன்ற பிரச்சனை தீரும்.

காஸ்குரியன்
செட்டகுளத்தின்கர வீடு, கொடைநாடு அஞ்சல், பெரம்பாவூர் வழி, எர்னாகுளம் மாவட்டம் – 683544
கேரளா, செல் : 9447916255, 8921405285

## தொடர் மஞ்சள் வேக வைக்கும் மாடல்

இம்முறையில் ஒரே ஆள் வேக வைத்த மஞ்சளை எடுத்து ட்ராலியில் வைத்து விடலாம். எந்த தொல்லையும் இன்றி முதலில் வயலில் வெட்டிய மஞ்சளை விரலி கிழங்கு, பலங்காளி ஆகியவற்றை தனித்தனியே பிரித்து கொள்ள வேண்டும். பிறகு வேக வைக்க வேண்டிய மஞ்சளை ஒரு சிறிய கொப்பரையில் கொட்டி ஊர வைத்து அலசி மண்ணில்லாமல் குடையில் அல்லி வைத்து கொள்ள வேண்டும். பிறகு கல் அடுப்பில் பெரிய கொப்பறையை அடுப்பில் வைத்து பாதி தண்ணீர் ஊற்றி கொதிக்க வைக்க வேண்டும். அதன் பின் கம்பிவலை கொப்பரையை குடையில் உள்ள மஞ்சளை கொட்டி தள்ளு வண்டியில் வைத்து அடுப்பிற்கு பக்கத்தில் கொண்டு வந்து வைத்துக் கொள்ள வேண்டும். அடுப்பு இருக்கும் இடத்தில் இருந்து 4' அடி தூரத்தில் ஊணி மரம் பூமியில் 2'யும் மேல் 8' யும் இருக்குமாறு நட்டுக் கொள்ள வேண்டும். இந்த ஊணி மரத்தில் மேல் பகுதியில் ஒரு கிளாம் அனைத்து அதில் ஒரு கோப்பை கட்டி அதை ஒரு கிடை மட்ட சப்போட் செய்த பைப்பை ஒரு முனையில் இருந்து 5' தள்ளி மத்தியில் கட்டி தொங்க வைத்து கட்ட வேண்டும். அதன் பிறகு 5' உள்ள பகுதியில் தகுந்த கிளாம் செய்து 4 கொக்கிகளுடன் சங்கிலியில் கொக்கி வைத்து தொங்க விட வேண்டும். வளை கொப்பரையில் உள்ள 4 முனையில் உள்ள வளையத்தில் அந்த சங்கிலியில் உள்ள கொக்கியை மாட்டி கொள்ள வேண்டும். அதன் பிறகு கிடை மட்ட பைப்பின் அடுத்த முனையை லேசாக அலுத்தினால் தள்ளுவண்டியில் கொப்பரை மேலே உயரும். அதை அடுப்பில் உள்ள கொப்பரைக்கு மேல் கொண்டு சென்று மெதுவாக கொப்பரைக்குள் வைக்க வேண்டும். இதற்கு முன் அடுப்பில் உள்ள கொப்பரைத் தண்ணீர் கொதித்து இருக்கும். வளை கொப்பரையும் மஞ்சலும் தண்ணீருக்குள் நன்றாக மூழ்கி இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் மஞ்சள் 15 நிமிடத்தில் வெந்து விடும். அதன் பிறகு பழைய படி பைப்பின் நீண்ட பகுதியில் தளவு பகுதியை அலுத்தினால் வளை கொப்பரை பெரிய கொப்பரைக்கு மேலே உயரும். பிறகு லேசாக டேர்ன் செய்து தள்ளு வண்டியில் வைத்து எங்கு வேண்டுமனாலும் தள்ளி சென்று கொட்டி கொள்ளலம். இதே போல் அடுத்து அடுத்து வளை கொப்பரையில் கழுவிய மஞ்சளை கொட்டி கிரைனில் மாட்டி கொப்பரையில் விட்டு வேக வைத்து கொள்ளலாம். இதற்கு 2 ஆள் போதும் சிரமம் இல்லாமல் செய்யலாம். அதி வேகமாய் வேலை ஆகும். அடுப்புக்கு போடும் விறகு குறையும். களைப்பின்றி நாள் முழு வேலை செய்யலாம். இந்த முறை மஞ்சள் மட்டுமின்றி மரவள்ளி கிழங்கு மற்றும் அவியில் அடுப்பிள் வேக வைக்கும் அனைத்து பொருளுக்கும் உபயோகிக்கலாம்.

ஜே.ஆர். தன்ராஜ்
பெரியப்புகாடு, பேலுக்குறிச்சி வழி, நாமக்கல் மாவட்டம் –637402, செல் : 9080083246

### மாடு கழிச்சலுக்கு

சோற்றுக்கற்றாலை 2 துண்டு, ஊமைத்தங்காய் மூள் நீக்கி வெட்டி கொடுத்து வந்தால் 2 நாளில் கழிச்சல் நின்று விடும்.

### ஆடுகளுக்கு சளி குறைய

சிறிய வெங்காயத்தை தட்டி துணியில் வைத்து பிழிந்து சாற்றை ஆட்டின் மூக்கில் விட உள்ளிருக்கும் புழு, ஆடு துங்கும் போது வெளியில் வந்து விடும்.

### மாட்டுக்கு காய்ச்சல் சளி தீர

வெங்காயம், மிளகு, வேலிபருத்தி, இலை, தண்டு , குண்டு மணி தழை, அனைத்தையும் சமபங்கு எடுத்து (மிளகு சற்று குறைவாக) தட்டி மாட்டின் வாயில் செலுத்தி வர காய்ச்சல் நின்று விடும்.

எஸ்.எஸ். குருசாமி, அந்தியூர்
ஈரோடு மாவட்டம்

| நாள் | இடம் | நிகழ்ச்சி நிரல் | தொடர்பு முகவரி |
|---|---|---|---|
| 22.5.2022 & 27.5. 2022 | பரமக்குடியிலிருந்து இராமேஸ்வரம் வரை | 47 வது அறிவைத்தேடும் நடை பயணம் | ஜெயபாண்டி<br>செல்: 6383602620<br>சேவா,45, டிபிஎம் நகர்<br>விராட்டிபத்து, மதுரை –16<br>போன்:0452–2380082<br>வெள்ளைப்பன்<br>தானம் அறக்கட்டளை<br>செல் : 9942651730 |

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம் ;

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய் ; |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 200 | 2000 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 150 | 1500 |
| தனிப்பிரதி | 30 | ---- |
| 15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250) + ( கொரியர் செலவு ரூ. 250 ) | 1500 | ---- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் “சேவா” மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , 2380943

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

------------------------------------
------------------------------------
------------------------------------
------------------------------------

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in